athiyamanteam.com | 8681859181 |Video Class + Test Batch TNPSC, Police, Forest Railway Exam

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 31

2019-2020

## டாக்டர். எம். மணிகண்டன்
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2019

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# கொள்கை விளக்கக் குறிப்பு 2019-2020

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | **ஆளுமை – மறு உருவாக்கம்** | 1 - 12 |
| 2 | **தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)** | 13 – 108 |
| 1 | முன்னுரை | 13 – 14 |
| 2 | தொலைநோக்குப் பார்வை | 15 |
| 3 | குறிக்கோள் | 15 – 16 |
| 4 | நோக்கங்கள் | 16 |
| 5 | நிர்வாக அமைப்பு | 17 |
| 6 | நிர்வாகச் சீர்திருத்தங்கள் | 18 |
| 7 | எல்காட் நிறுவனத்தில் மின்னணு மயமாக்க நடவடிக்கைகள் | 19 – 20 |
| 7.1 | மின்னணு அலுவலகம் | 19 |
| 7.2 | மின்னணு கொள்முதல் | 19 |
| 7.3 | மின்னணு வருகைப்பதிவு | 19 – 20 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 7.4 | மின்னணு மறு ஆய்வு | 20 |
| 8 | செயல்பாடுகள் | 21 - 105 |
| 8.1 | கொள்முதல் பிரிவு | 21 |
| 8.2 | எல்காட் மின்னணு சந்தை (ELCOT e-Market) (ஒற்றைச் சாளரக் கொள்முதல் வலைதளம்) | 21 – 22 |
| 8.3 | தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு மற்றும் வளர்ச்சி | 22 |
| 8.4 | உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 | 24 – 26 |
| 8.5 | தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை (IT/ITeS) நிறுவனங்களுக்கு உதவுதல் | 26 |
| 8.6 | தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs) | 26 – 62 |
| 8.6.1 | எல்கோசெஸ் (ELCOSEZs) - சோழிங்க நல்லூர், சென்னை | 28 – 32 |
| 8.6.2 | எல்கோசெஸ் (ELCOSEZ) - விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் | 32 – 34 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 8.6.3 | எல்கோசெஸ் (ELCOSEZ) - இலந்தைகுளம், மதுரை | 34 – 37 |
| 8.6.4 | எல்கோசெஸ் (ELCOSEZ) - வடபழஞ்சி, மதுரை | 37 – 42 |
| 8.6.5 | எல்கோசெஸ் (ELCOSEZ) - நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி | 43 – 47 |
| 8.6.6 | எல்கோசெஸ் (ELCOSEZ) - கங்கை கொண்டான், திருநெல்வேலி | 47 – 50 |
| 8.6.7 | எல்கோசெஸ் – ஜாகீர்அம்மா பாளையம், சேலம் | 50 – 54 |
| 8.6.8 | எல்கோசெஸ் - விஸ்வநாதபுரம், ஓசூர் | 55 – 60 |
| 8.6.9 | எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் முதலீட்டின் விவரங்கள் | 60 |
| 8.6.10 | எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் ஏற்றுமதி விவரங்கள் | 61 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 8.6.11 | எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் வேலைவாய்ப்பு விவரங்கள் | 62 |
| 8.7 | தொழில்முனைவோர் மையம் சென்னை மற்றும் கோயம்புத்தூர் | 62 – 64 |
| 8.8 | நிதி தொழில்நுட்பச் சிறப்பு மையம் (FinTech Centre of Excellence (CoE)) | 64 - 65 |
| 8.9 | மதுரையில் தொழில்நுட்பக் கருத்துக்களம் (Tech Forum at Madurai) | 65 |
| 8.10 | தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு | 66 – 84 |
| 8.10.1 | இணைப்பு சேவைகள் | 67 – 73 |
| அ) | தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) | 67 – 70 |
| ஆ) | தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு (National Knowledge Network) | 70 – 71 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| இ) | தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பிற்கான பதிலி இணைப்பு (Redundant Connectivity) | 71 - 72 |
| ஈ) | இதர இணைப்புச் சேவைகள் | 72 - 73 |
| i) | MPLS VPN (1:1) இணைப்பு | 72 |
| ii) | இணையக் குத்தகை (1:1) Internet Leased Line) | 72 – 73 |
| iii) | VPNoBB இணைப்பு | 73 |
| 8.10.2 | பதிவேற்றம் மற்றும் தொடர்புடைய சேவைகள் | 73 – 81 |
| 8.10.2.1 | பதிவேற்றச் சேவைகள் | 75 – 77 |
| i) | தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-I (TNSDC-I) | 75 |
| ii) | தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-II (TNSDC-II) | 76 – 77 |
| 8.10.2.2 | பேரிடர் மீட்பு சேவைகள் | 78 – 80 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| அ) | தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC). எல்கோசெஸ், திருச்சிராப்பள்ளி | 78 – 79 |
| ஆ) | அருகாமை பேரிடர் மீட்பு மையம் (NLDRC), சென்னை | 80 |
| 8.10.2.3 | தமிழ்நாடு மேகக் கணினி அமைப்பு சேவைகள் | 80 - 81 |
| 8.10.3 | மின்புலப் பாதுகாப்பு சேவைகள் | 81 - 84 |
| அ) | தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்திற்கான பாதுகாப்பு கட்டமைப்பு | 81 – 82 |
| ஆ) | தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்பு கட்டமைப்பு (CSA-TN) | 83 – 84 |
| 8.11 | மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் | 84 – 87 |
| 8.12 | மின் ஆளுமை | 87 – 98 |
| 8.12.1 | முக்கிய மின் ஆளுமைத் திட்டங்கள் | 87 – 88 |
| 8.12.2 | அனைத்திந்தியப் பணிஅலுவலர் முனையம் | 89 |
| 8.12.3 | அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்ட இணையதளங்கள் | 90 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 8.12.4 | தமிழ்நாடு அரசின் வெளிப்படை அரசுத் தரவுகள் | 91 – 92 |
| 8.12.5 | ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs) | 92 – 97 |
| 8.12.6 | மின் திறன் வகுப்பறைகள் | 97 – 98 |
| 8.13 | அம்மா அழைப்பு மையம் (ACC) | 99 – 100 |
| 8.14 | திறன் மேம்பாடு | 101 – 102 |
| 8.15 | வலை அமைப்பு | 103 – 105 |
| அ) | காணொலிக் காட்சி | 103 |
| ஆ) | உள் சுற்று தொலைக்காட்சிக் கண்காணிப்பு அமைப்பு | 103 – 104 |
| இ) | மின்னணு அறிவிப்புப் பலகை | 104 |
| ஈ) | மின்னணு கடிகாரம் மற்றும் வலையமைப்புப் பராமரிப்பு | 104 – 105 |
| 9. | பரிசீலனையில் உள்ள செயற்குறிப்புகள் | 105 – 106 |
| 9.1 | மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை (Electronics Hardware Manufacturing Policy) | 105 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 9.2 | நில வங்கிகளை உருவாக்குதல் | 105 – 106 |
| 9.3 | நிதி தொழில்நுட்பக் (FinTech) கொள்கை | 106 |
| 10. | நிதி செயல்பாடு | 106 – 108 |
| 3 | **மின்னாளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை** | 109 – 172 |
| 1 | முன்னுரை | 109 |
| 2 | தொலைநோக்குப் பார்வை | 109 |
| 3 | குறிக்கோள் | 110 |
| 4 | நோக்கங்கள் | 111 - 113 |
| 5. | நிறுவனக் கட்டமைப்பு | 113 – 121 |
| 5.1 | மின்னாளுமை ஆணையரகம் | 113 |
| 5.2 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | 114 |
| 5.3 | வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்பு மையம் Centre of Excellence for Emerging Technology (CEET) | 114 – 119 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 5.4 | மாநில மின் குறிக்கோள் குழு (State e-Mission Team) | 120 |
| 5.5 | மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (DeGS) | 120 - 121 |
| 6. | தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு | 121 – 122 |
| 7. | தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்) விதிகள், 2016 | 122 – 123 |
| 8. | தமிழ்நாடு மின்னாளுமை முகமையில் (Tamil Nadu e-Governance Agency) மின்னாளுமை மற்றும் பிற முயற்சிகள் | 123 – 125 |
| 8.1 | மின்வலைதளம் | 123 |
| 8.2 | மின்- உள்கட்டமைப்பு | 123 |
| 8.3 | மின்-கொள்முதல் | 124 |
| 8.4 | மின்-வருகைப் பதிவேடு | 124 |
| 8.5 | மின்-களஞ்சியம் | 124 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 8.6 | மின்-கண்காணிப்பு | 125 |
| 9. | புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 125 – 127 |
| 10 | மின்- ஊடகம் ( நமது அரசு) | 127 – 128 |
| 11 | வாரந்திரக் கருத்தரங்குகள் | 128 – 129 |
| 12 | நடவடிக்கைகள் | 130 – 158 |
| 12.1 | அரசு இ-சேவை மையங்கள் | 130 – 145 |
| 12.2 | நிரந்தரப்பதிவு மையங்கள் (PECs) | 146 – 147 |
| 12.3 | மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம் (SFDB) | 147 – 148 |
| 12.4 | உங்கள் அரசை அறிந்து கொள்ளுங்கள் (KYG) | 148 |
| 12.5 | உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம் (Tiny URL) | 149 |
| 12.6 | அரசுத்துறை இணையதளங்களின் அணுகு முறைகளை (Accessibility) தர நிலைப்படுத்துதல் | 149 – 150 |
| 12.7 | மக்கள் எண் | 150 – 151 |
| 12.8 | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) | 151 – 152 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 12.9 | தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை (IT Security Audit) | 152 – 153 |
| 12.10 | அம்மா இ-கிராமம் | 153 – 154 |
| 12.11 | தகவல் தொழில்நுட்பவியல் ஆளுமைக்கான மன்றம் (G-IT Forum) | 155 |
| 12.12 | இணையவழித் தேர்வுகளை சேவையாக வழங்குதல் | 155 |
| 12.13 | தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான கலந்தாய்வு (TNEA) | 156 |
| 12.14 | மின் அலுவலகம் | 156 – 157 |
| 12.15 | இ-அடங்கல் வலை பயன்பாடு | 157 - 158 |
| 12.16 | இ-அடங்கல் கைபேசி செயலி | 158 |
| 13 | மின்னாளுமை முயற்சிகளின் தொகுப்பு | 158 – 159 |
| 14 | திறன் மேம்பாடு | 159 – 160 |
| 15 | தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்ட மென்பொருள்கள் | 161 – 166 |
| 16 | விருதுகள் | 167 – 168 |
| 17 | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை பெற்ற விருதுகள் | 169 – 171 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 17.1 | (இ-பிஸ்) விருது - தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உருவாக்கிய ஒற்றைச் சாளர அமைப்பு | 169 |
| 17.2 | வெப் ரத்னா விருது | 170 – 171 |
| 18 | நிதிநிலைச் செயல்பாடுகள் | 171 – 172 |
| **4** | **தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம்** | 173 -198 |
| 1 | முன்னுரை | 173 |
| 2 | தொலைநோக்குப் பார்வை | 174 |
| 3 | குறிக்கோள் | 174 – 175 |
| 4 | நோக்கங்கள் | 175 |
| 5 | நிறுவன அமைப்பு | 176 – 177 |
| 6 | சாதனைகள் | 177 – 181 |
| 6.1 | அனலாக் ஒளிபரப்பில் கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகள் | 177 – 179 |
| 6.2 | டிஜிட்டல் கம்பி வடத் தொலைக்காட்சி சேவை | 179 – 181 |
| 7 | இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய (TRAI) புதிய கட்டண ஆணை | 181 – 184 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 8 | TACTV அரசு இ-சேவை மையங்கள் | 184 – 188 |
| 8.1 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய சேவைகள் | 184 – 185 |
| 8.2 | அடையாள அட்டை அச்சிட்டு வழங்குதல் | 185 |
| 8.3 | அரசு இ-சேவை மையங்களின் சாதனை | 186 – 187 |
| 8.4 | தனியார் இன்டர்நெட் ப்ரௌசிங் சென்டர் பதிவு செய்தல் | 188 |
| 9 | TACTV நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் | 189 – 191 |
| 10 | இல்லந்தோறும் இணையம் - இணையவழி சேவை | 192 – 193 |
| 11 | அரசு பள்ளிகளுக்கு இலவச அகண்ட அலைவரிசை இணையம் | 193 – 194 |
| 12 | தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிதிநிலைச் செயல்பாடு | 194 – 198 |
| **5** | **தமிழ் இணையக் கல்விக்கழகம்** | 199 – 215 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 199 |
| 2 | தொலைநோக்குப் பார்வை | 199 |
| 3 | குறிக்கோள் | 199 |
| 4 | நோக்கங்கள் | 200 |
| 5 | செயல்பாடுகள் | 201 – 204 |
| 5.1 | கல்வித் திட்டங்கள் | 201 |
| 5.1.1 | மழலைக் கல்வி | 201 |
| 5.1.2 | சான்றிதழ் (1-ஆம் வகுப்பு முதல் 6-ஆம் வகுப்பு வரையிலான படிப்பிற்கு இணையானது) | 202 |
| 5.1.3 | மேற்சான்றிதழ் (7-ஆம் வகுப்பு முதல் 12- ஆம் வகுப்பு வரை இணையானது) | 202 |
| 5.1.4 | இளநிலைத் தமிழியல் பட்டக் கல்வி | 203 – 204 |
| 6 | இணையவழி கணினித் தமிழ்ப் பாடத் திட்டம் | 204 – 205 |
| 7 | மின் நூலகம் | 205 – 206 |
| 7.1 | தமிழ் கலை மற்றும் கலாச்சார செயல்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் | 205 – 206 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 7.2 | கணினித்தமிழ் | 206 |
| 8 | தமிழர் தகவலாற்றுப்படை | 207 – 208 |
| 9 | மின் நூலகம் உருவாக்குதல் | 208 – 209 |
| 10 | ஓலைச்சுவடிகளின் மின்னுருவாக்கம் மற்றும் அட்டவணைப்படுத்துதல் | 210 |
| 11 | மாதாந்திரத் தொடர் சொற்பொழிவு | 210 – 211 |
| 12 | தமிழ் உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருட்கள் | 211 |
| 13 | இயந்திர மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் | 212 |
| 14 | புதிய பாடத்திட்டங்கள் உருவாக்குதல் | 212 |
| 15 | தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பரப்புரைப் பணிகள் | 213 – 215 |
| 15.1 | கணித்தமிழ்ப் பேரவை | 213 |
| 15.2 | தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம் | 213 – 214 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 15.3 | கான் கல்விக்கழகம் கல்விக் காணொலிகளைத் தமிழாக்கம் செய்தல் | 214 |
| 15.4 | படைப்பாக்கப் பொதுமை முயற்சி | 215 |
| 6 | **தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)** | 216 – 225 |
| 1 | முன்னுரை | 216 |
| 2 | தொலைநோக்குப் பார்வை | 216 |
| 3 | குறிக்கோள் | 216 – 217 |
| 4 | நிறுவன அமைப்பு | 217 |
| 5 | பாரத்நெட் | 217 -220 |
| 6 | தமிழ்நெட் | 220 – 222 |
| 7 | ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் கட்டமைப்பிற்கான வலையமைப்பு | 222 – 225 |
| **7** | **தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்** | 226 – 238 |
| 1 | முன்னுரை | 226 – 227 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2 | தொலைநோக்குப் பார்வை | 227 |
| 3 | குறிக்கோள் | 227 – 228 |
| 4 | நோக்கங்கள் | 228 |
| 5 | செயல்பாடுகள் | 228 – 233 |
| 5.1 | ஆசிரியர் மேம்பாடு | 229 |
| 5.2 | திறன் மேம்பாடு | 229 – 231 |
| 5.3 | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (2017-18) | 232 |
| 5.4 | இளைஞர் மேம்பாடு | 232 – 233 |
| 6 | ஆய்வுகள் மற்றும் பிரசுரங்கள் | 233 – 234 |
| 7 | டிஜிட்டல் அதிகாரம் அளித்தல் | 234 |
| 8 | தொழில் துறை மற்றும் கல்வி நிறுவனத் தொடர்புத் திட்டம் | 235 – 236 |
| 9 | 2018-2019-இல் நிறைவுற்ற அரசுத் திட்டங்கள் | 237 - 238 |

## அத்தியாயம் - 1

## ஆளுமை – மறு உருவாக்கம்

பல்வேறு நேர்வுகளில் கொள்கைகளை வகுத்தல், கோப்புகளைக் கையாளுதல், வகுக்கப்பட்ட கொள்கைகளுக்கேற்ப முடிவுகள் மேற்கொள்ளுதல், சேவைகளை அளித்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், தொழில் வளர்ச்சிக்கு உதவுதல் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பராமரித்தல் ஆகியவை எந்த ஒரு அரசின் முக்கிய செயல்பாடுகளுள் தலையாயதாகும். ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும் அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களின் (Information and Communication Technologies) பயன்பாடு சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டு தற்பொழுது திறம்படச் செயல்படுவதுடன், குடிமக்களுக்கு மன நிறைவை ஏற்படுத்தும் வகையில் கற்பனைக்கெட்டாத பிரமிக்கத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. சமூக வலைதளங்களில் பதிவேற்றம்

செய்யப்படும் குடிமக்களின் கருத்துகளை நோக்கும் பொழுது, அவர்கள் மேலும் சிறந்த நிர்வாகத்தை அரசிடமிருந்து எதிர்பார்ப்பது புலனாகிறது. குடிமக்களுக்கு அதிக அளவில் பயன்படும் வகையில் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழக அரசின் ஒவ்வொரு துறையும் முகமையும் மேற்கொண்ட முன் முயற்சிகள் நல்ல பலனைத் தந்துள்ளன என்பது தெளிவாகிறது. தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மற்றும் முழுமையான மென்பொருள் செயல்பாடுகளை உருவாக்குவதற்குப் பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், அதற்கிணையாக, தமிழகத்தைத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் தொடர்பான தொழில்களை மேற்கொள்ள உகந்த மாநிலமாக உலகளாவிய முதலீட்டாளர்கள் தேர்ந்தெடுக்க ஏதுவாக, பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. தகவல்

மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் மற்றும் அதன் பயன்பாட்டினைப் பொருத்தவரையில், தமிழ்நாடு அனைவரையும் கவரும் ஒரு மாநிலமாகத் திகழ்கிறது என்பதில் வியப்பில்லை. கடந்த கால சாதனைகளை நினைவு கூர்ந்திடவும், வளர்ந்துவரும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் சாதனைகள் பல புரியவும் இது ஒரு நல்ல தருணமாகும்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) மூலமாக, தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொருள்கள், சேவைகள் கொள்முதல், மின்னாளுமை மற்றும் உலகத் தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றில் தகவல் தொழில்நுட்பவியல் துறை முன்னணி வகிக்கிறது. தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை, தொழில் கொள்கைகள் வெளியிடப்பட்டதன் பயனாக, பெரிய மற்றும் சிறிய தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் தமிழகத்தில் நிறுவப்பட்டு, அதன் மூலம் திறமை மிக்க

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் ஒரு சக்தி வாய்ந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. பல்கிப் பெருகி வரும் 500க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள், இணைய வசதிகள், சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள், ஆகாயம், கடல் மற்றும் தரைவழிப் போக்குவரத்து வசதிகள், சென்னை மற்றும் தமிழகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களின் சமூக உட்கட்டமைப்பு ஆகியவற்றைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. அடிப்படையில் பெரிய மற்றும் சிறிய தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் காலூன்றியுள்ளன. புதிய தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் கொள்கை (ICT Policy), வரைவு மின்னணு வன்பொருள் தயாரிப்புக் கொள்கை (Draft Electronics Hardware Manufacturing Policy), தமிழகம் முழுதும் தகவல் தொடர்பு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (IT-SEZs), கிராமப்புற வணிக வெளிப்பணிக் கொள்கை (Rural BPO Policy), மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், தகவல் தொழில்நுட்ப

உட்கட்டமைப்பினை உருவாக்குதல், நிதித் தொழில் நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்பு மையத்தை உருவாக்குதல் (Centre of Excellence in FinTech), தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கு பெறுதல், தொழில் முனைவோரை (Startups) ஊக்குவித்தல், தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICT Academy of Tamil Nadu) மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் போன்றவை தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மேலும் மேம்பட ஊக்குவிக்கும் முக்கிய காரணிகளாக உள்ளன.

மின் ஆளுமையில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதனைத் தமிழ்நாடு மின்னாளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency – TNeGA), தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (Electronics Corporation of Tamil Nadu – ELCOT) மற்றும் தேசிய தகவலியல் மையம் (National Informatics Centre – NIC) ஆகியவற்றின் துணையுடன் தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை முன்னின்று வழிநடத்துகிறது.

முழுவதும் கணினிமயமாக்கப்பட்ட அரசு சேவைகளைக் குடிமக்கள் அரசு இ-சேவை மையங்கள் மூலமாகவோ அல்லது தங்கள் மேசைக்கணினி (desktop) அல்லது திறன்பேசி (smart phone) வாயிலாகவோ தமது இருப்பிடத்திலேயே பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களான, நம்பிக்கை இணையம் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரக் கற்றல் (Machine Learning), பொருட்களின் இணையம் (Internet of Things), குறு விமானங்கள் (Drones), மிகை நிகர் உண்மை (Augmented Reality), மெய்நிகர் உண்மை (Virtual Reality), சேர்க்கை உற்பத்தி (Additive Manufacturing), பகுப்பாய்வு (Analytics), புவிசார் தகவல் அமைப்பு (Geographical Information System – GIS) ஆகியவற்றைப் பயன்படுத்தி இதுகாறும் தீர்க்கப்படாத ஆளுமை குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், வளர்ந்து வரும் புதிய தொழில் நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையத்தை (Centre of Excellence in Emerging Technologies – CEET) ஏற்படுத்தி,

தமிழ்நாடு மின்னாளுமை முகமை பெரிய அளவில் முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளது. தனியார் துறைக்கான உற்பத்திப் பொருள்கள் உருவாக்கல், செயல்முறைகள் மற்றும் காப்புரிமை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள இளம் தொழில் முனைவோரின் புதுமை முயற்சி இத்தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த ஒரு திறவுகோலாக விளங்குகிறது. அத்தகைய தொழில் முனைவோரின் திறமைகளை, ஆளுமை குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பயன்படுத்திக் கொள்ளுதல் பொருந்தும் எனக் கருதப்படுகிறது. இத் தொழில்நுட்பங்களின் ஆற்றல் மற்றும் அவற்றின் பயன்களைப் பெற உதவும் புத்தாக்க எண்ணங்கள் (Innovative thought processes) வெகு விரைவில் வெளிப்படும். புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மாநிலக் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளமானது (State Family Data Base – SFDB), அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கும்,

குடும்பங்களுக்கும் சென்றடைவதை உறுதி செய்யும். கணினி வழி மேலாண்மையுடன் கூடிய அலுவலகங்கள் (ERP driven offices), முன்கணிப்பு மற்றும் தரவு சார் ஆளுமை (predictive and data driven governance) ஆகியவை இன்றைய சூழலில் இன்றியமையாததாகும். அரிய வளங்களை உரிய முறையில் பயன்படுத்தச் சரியான முடிவெடுப்பதற்கு, சரியான தரவு திறவு கோலாக அமையும். வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களைத் தமிழ் இணையக் கல்விக் கழகம் பயன்படுத்தி வருவதால் கணினித் தமிழும் ஊக்கம் பெறும்.

தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் சாதனங்கள் ஆளுமை மற்றும் சமுதாயத்திற்குப் பேருதவி புரிந்தாலும், அவற்றிலும் சில குறைபாடுகள் உள்ளன. எனவே, மின் ஆளுமை மற்றும் மின்பாதுகாப்பு ஆகிய இரண்டும் ஒருங்கே செயல்பட வேண்டும். அரசு பரிவர்த்தனைகளுக்கான மின்னணுப் பாதுகாப்பினை உறுதிசெய்திடும் வகையில் தமிழ்நாடு இணையப் பாதுகாப்பு வடிவமைப்பு (Cyber Security

Architecture for Tamil Nadu) என்ற அமைப்பை ஏற்படுத்தி தமிழகம் பெரும் முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளது. இது, CERT-TN (Computer Emergency Response Team-Tamil Nadu), SOC-TN (Security Operations Centre –Tamil Nadu), CCMP-TN (Cyber Crisis Management Plan – Tamil Nadu) மற்றும் SAF-TN (Security Architecture Framework – Tamil Nadu) ஆகிய துணை அமைப்புகளை ஏற்படுத்த வழிவகுத்துள்ளது.

மாநிலத் தரவு மையம் (State Data Centre), மாநிலப் பேரிடர் மீட்பு மையம் (State Disaster Recovery Cenre), மேகக்கணினிய உட்கட்டமைப்பு (Cloud Infrastructure), தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (State Wide Area Network), மாநில வலைதளம் (State Portal) ஆகியவற்றுடன் முக்கியமாக அலைவரிசை இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு எந்த ஒரு மின்னாளுமை செயலாக்கத்திற்கும் முதுகெலும்பாகத் திகழ்கிறது. பெரிய அளவிலான முதலீடுகள் இதற்கெனச்

செய்யப்பட்டிருந்தாலும், புதிய நாட்டங்களையும் தொழில்நுட்பங்களையும் இத்துறையில் புகுத்துவது அவசியமாகிறது. தமிழகத்தில் உள்ள 12,524 கிராமப் பஞ்சாயத்துகள், 528 பேரூராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 15 மாநகராட்சிகளுக்கும் குறைந்த பட்சம் 1 Gbps அளவுள்ள இணைப்புகளை வழங்குவதை உறுதி செய்திடும் வகையில் 'பாரத்நெட்' மற்றும் 'தமிழ்நெட்' திட்டத்தின் கீழ் 55,000 கி.மீ. தூரத்திற்குக் கண்ணாடி இழைவட வலையமைப்பு (Optical Fibre Network) அமைப்பதற்கென, தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (Tamil Nadu FibreNet Corporation – TANFINET) ஒரு சிறப்பு நோக்கு நிறுவனமாக (Special Purpose Vehicle) உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்தே அரசுடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில் அமைந்த இத்திட்டம், தற்போதைய நடைமுறையினை மாற்றியமைக்கும். ஐக்கிய நாடுகள் அவையின் (United Nations), நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (SDG) இணக்கமாகவும் இது

விளங்கும். ஒவ்வொரு அரசுத்துறை/முகமை தனது அமைப்புத் திறனை மேம்படுத்திடும் வகையிலும், பொது மக்களுக்கான சேவைகளை மேலும் சிறப்பாக அளித்திடும் வகையிலும், அவற்றின் மென்பொருள் பயன்பாடுகள் மேம்படுத்தப்படும். 'பாரத்நெட்' மற்றும் 'தமிழ்நெட்' உட்கட்டமைப்பைப் பயன்படுத்தி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பொது மக்களுக்கு வழங்கி வரும் டிஜிட்டல் தொலைக்காட்சி சேவையுடன், வெகு விரைவில் இணையவழித் தொலைக்காட்சி சேவை (IPTV), Over The Top (OTT) சேவை மற்றும் இணைய இணைப்புகளையும் கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வழங்கும்.

அரசு நிர்வாகத்தைத் திறம்பட மேற்கொண்டு, அதன் மூலம் சிறப்பான சேவைகளைப் பொதுமக்கள் தம் இருப்பிடத்திலிருந்தே பெற்றிடும் வகையில் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் சாதனங்களைப் பயன்படுத்துவதில் இந்த அரசு ஒரு மிகப் பெரிய மாற்றத்தினைக் கண்டுள்ளது. அறிவுசார் ஆளுமை

முறை (Knowledge driven Governance System) மற்றும் அறிவுசார் சமுதாயத்தை (Knowledge driven Society) உருவாக்கும் ஒரு சூழலை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, அனைத்து அரசுத் துறைகள்/முகமைகள், மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சகம், NIC, C-DAC, STPI, SETS, STQC, IIT-MRP போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள், தனியார் துறையைச் சார்ந்த NASSCOM, CII, FICCI, MCC, ELCINA, MAIT போன்ற நிறுவனங்கள், ஆலோசகர்கள், தொழில் முனைவோர் மற்றும் மென்பொருள் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன், கிராமம் முதல் தலைமைச் செயலகம் வரையில் உள்ள அரசுத் துறைகள்/முகமைகள் வருங்காலத் தேவைகளுக்கேற்ப பெரிய மாற்றங்களை எய்திட தகவல் தொழில்நுட்பவியல் துறை முன்னிற்கும்.

## அத்தியாயம் - 2

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

### 1. முன்னுரை

எல்காட் நிறுவனம், நிறுவனங்கள் சட்டம் 1956– இன் கீழ், 21.03.1977 அன்று, மாநிலத்தில் மின்னணுத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான, பொதுத்துறை நிறுவனம் ஆகும். தொடக்கத்திலிருந்து, பல கூட்டு நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களை முன்னேற்றுவதன் மூலம், மின்னணுத் தொழில் துறை வளர்ச்சி பெறுவதற்கு, எல்காட் நிறுவனம் பங்களித்து வருகிறது. தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலுக்குப் பின் தொழில் துறையின் போக்கிற்கிணங்க மின்னணு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT / ITeS) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொள்முதல் முகமையாக, எல்காட்

நிறுவனம், தன்னைப் படிப்படியாக மறு சீரமைப்பு செய்துகொண்டது. பின்னர், எல்காட் நிறுவனம் தன்னுடைய செயல்பாடுகளை விரிவுபடுத்த, சென்னை மற்றும் மாநிலத்தின் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (இரண்டு), திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் சுமார் 1321.61 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.562.11 கோடி முதலீட்டில், எட்டு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி சுமார் 77,000 நபர்களுக்கு, நேரடி வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் (TNSDC), தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC), மேகக்கணினி அமைப்பு (Cloud) முதலான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளையும் எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

**2. தொலைநோக்குப் பார்வை**

தமிழ்நாட்டை மின்னணு மயமாக்கப்பட்ட மாநிலமாக உருவாக்குவதற்கு அரசுக்கு உதவிகரமாகத் திகழ்வதே எல்காட் நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வையாகும்.

**3. குறிக்கோள்**

அ. மக்கள் மற்றும் தொழில்துறைக்கு, தமிழகத்தை ஒரு ஏற்ற மற்றும் சிறந்த மாநிலமாகவும் விரும்பத்தக்க இடமாகவும் அடையாளப்படுத்துதல்.

ஆ. உலகமெங்கும் உள்ள தகவல் தொழில்நுட்ப முதலீட்டாளர்களிடையே, தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்பத்திற்கு உகந்த இடமாக உயர்த்துதல்.

இ. அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு, தகவல் தொழில்நுட்பப்

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விருப்ப விற்பனையாளராகத் திகழ்தல்.

**4. நோக்கங்கள்**

அ. தமிழகத்தை முதலீட்டுக்கு உகந்த இடமாக மாற்றும் வகையில் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டை மேற்கொள்ளுதல்.


ஆ. தகவல் தொழில்நுட்ப வன்பொருள் / மென்பொருள் கொள்முதலுக்கான முகமையாகவும், அரசுத் துறைகளுக்கான ஆலோசகராகவும் செயல்படுதல்.

இ. அரசுத் துறைகளுக்குத் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளை வழங்குதல்.


ஈ. அரசுத் துறைகளுக்குத் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களை வழங்குதல்.

## 5. நிர்வாக அமைப்பு

**தமிழ்நாடு மின்னணு நிறுவன வரிசை முறை நிர்வாக அமைப்பு**




**ஒவ்வொரு துறைப்பகுதியின் கீழ் உள்ள நிர்வாக அமைப்பு**



### 6. நிர்வாகச் சீர்திருத்தங்கள்

சென்னை பெருங்குடியில் இயங்கி வந்த எல்காட் நிறுவனத்தின் தொழிற்சாலைப் பிரிவைத் தலைமையகத்துடன் இணைத்த பிறகு, தொழிற்சாலைப் பணியாளர்களைத் தலைமையகத்தில் ஏற்று பணியமர்த்துவதற்கு ஏதுவாக 17 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த பணி விதிகளில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள், எல்காட் நிறுவனத்தால் 2018-19-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென எல்காட் இயக்குநர் குழுமத்தால் முன்மொழியப்பட்ட பணி விதித் திருத்தங்களுக்கு, அரசாணை (நிலை) எண்.4, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்வாகம்.1) துறை, நாள் 06.03.2019 வாயிலாக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த முயற்சியினால், கடந்த 20 ஆண்டு காலமாக நிலுவையிலிருந்த எல்காட் நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளின் பதவி உயர்வு பிரச்சனை இந்த அரசினால் தீர்வு செய்யப்பட்டது.

## 7. எல்காட் நிறுவனத்தில் மின்னணு மயமாக்க நடவடிக்கைகள்

### 7.1. மின்னணு அலுவலகம்

எல்காட் நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக நிறுவன வளத்திட்டமிடல் மென்பொருளை (ERP) பயன்படுத்தி வருகிறது.

### 7.2. மின்னணு கொள்முதல்

எல்காட் நிறுவனம் தனக்குத் தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளை இணையதளம் மூலமாகக் கொள்முதல் செய்து வருகிறது.

### 7.3. மின்னணு வருகைப்பதிவு

2015-ஆம் ஆண்டு முதல், எல்காட் நிறுவனத்தில் அலுவலர்கள் / பணியாளர்களின் வருகைப்பதிவானது விரல் அச்சுப்பதிவு இயந்திரம் (Bio-Metric) வாயிலாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த மின்னணு வருகைப்பதிவு,

நுழைவுக் கட்டுப்பாட்டு அமைப்புடன் (Access Control System) இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 7.4. மின்னணு – மறு ஆய்வு

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA), தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV), தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA) மற்றும் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) ஆகிய ஐந்து துறைகளால் கையாளப்படும் திட்டங்களை, மறு ஆய்வு செய்யும் மென்பொருள் ஒன்றை எல்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது.

## 8. செயல்பாடுகள்

### 8.1. கொள்முதல் பிரிவு

அரசாணை (நிலை) எண்.58, நிதி (பொதுத்துறை நிறுவனங்கள்) துறை, நாள் 16.02.1999-இன் படி, அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் மாநிலத் தன்னாட்சி அமைப்புகளுக்குத் தேவைப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருள்களைக் கொள்முதல் செய்து தரும் விருப்பக் கொள்முதல் முகமையாக, எல்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது

### 8.2. எல்காட் மின்னணுச் சந்தை (ELCOT e-Market) (ஒற்றைச் சாளரக் கொள்முதல் வலைதளம்)

https://emarket.elcot.in என்ற இணையதளம், இணையம் வாயிலாக (Online) அரசுத் துறைகள், நிகழ்நிலை மூலமாகப் பணம் செலுத்தி அதனைத் தொடர்ந்து கண்காணிக்கவும், பணம் செலுத்துவதிலிருந்து மீதமுள்ள பணத்தைத் திரும்பப் பெறும் வரையிலான நிகழ்வுகளை அவ்வப்போது தெரிந்து கொள்ளவும்

வழிவகை செய்கிறது. விற்பனையாளர்களும் ஆணை வழங்கப்பட்டதிலிருந்து கட்டணம் பெறப்படும் வரையிலான நிகழ்வுகளை இணையம் வழியாகத் தெரிந்து கொள்ள, இத்தளம் உதவியாக உள்ளது.

### 8.3. தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் வருகையிலிருந்து தகவல் தொழில்நுட்பவியல்/ தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT / ITeS) முதலீட்டிற்கான விருப்பத் தேர்வு மாநிலமாகத் தமிழகத்தைக் கொண்டு வருவதில் எல்காட் நிறுவனம், முன்னோடியாகத் திகழ்கிறது. இந்த நோக்கத்தை அடைவதற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புதிய தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை - 2018 (ICT Policy 2018) 10.09.2018 அன்று வெளியிடப்பட்டது.



**படம் -1:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புதிய தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் கொள்கையை (ICT Policy 2018) வெளியிடுதல்

## 8.4. உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019

எல்காட் நிறுவனம் சமீபத்தில் நிறைவடைந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019-இல், தகவல் தொழில்நுட்பவியல் / தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT / ITeS) நிறுவனங்கள் சார்ந்த துறையில் ரூ.11,974 கோடி முதலீடு கொண்டு வருவதில் வெற்றி கண்டுள்ளது.

மேலும் பின்வரும் செயல்திறன் முயற்சிகள் எல்காட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. தமிழ்நாட்டிலுள்ள இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT / ITeS) சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2. தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கான விருப்பத் தேர்வாக தமிழ்நாட்டை ஊக்குவிக்க, தேசிய

மற்றும் பன்னாட்டளவில் மதிப்புமிக்க, தகவல் தொழில்நுட்பவியல் நிகழ்ச்சிகள் / சாலை நிகழ்ச்சிகளில் (Road Shows) பங்கேற்றல் மற்றும் நடத்துதல்.

3. தகவல் தொழில்நுட்பப் பூங்கா (IT-Park) / தகவல் தொழில்நுட்பக் கட்டடம் போன்ற உட்கட்டமைப்புகளை ஊக்குவிப்பதற்காகத் தடையின்மைச் சான்றிதழ் (NOC) வழங்குதல்.

4. இளம் தொழில் முனைவோர்களுக்குத் தொழில்நுட்பத் திறன்களை ஊக்குவிக்க தொழில்முனைவோர் மையங்களை நிறுவுதல்.

5. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான நம்பிக்கை இணையம் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரக் கற்றல் (Machine Learning), ஆளில்லா குறு விமானங்கள் (Drones), மிகைநிகர் உண்மை (Augmented Reality) / மெய்நிகர் உண்மை (Virtual Reality), ரோபோடிக்ஸ் (Robotics), பொருட்களின் இணையம் (IoT - Internet of

Things), தரவு பகுப்பாய்வு (Data Analytics) ஆகியவற்றிற்கான ஒரு தொழில்நுட்பக் கருத்துக்களம் (Tech Forum) அமைக்கப்பட உள்ளது.

### 8.5. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை (IT / ITeS) நிறுவனங்களுக்கு உதவுதல்

எல்காட் நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை (IT / ITeS) நிறுவனங்கள், தங்கள் தொழில்களை நிறுவத் தேவையான அனைத்து ஒப்புதல்களைப் பெறுவதற்கு உதவுகிறது.

### 8.6. தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs)

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான நிறுவனங்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக அமைவதற்கு ஏதுவாக, 8 தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த

சேவைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (IT / ITES SEZs) பின்வரும் முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் எல்காட் நிறுவனம் உருவாக்கி உள்ளது.

1. சோழிங்கநல்லூர், சென்னை
2. விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்
3. இலந்தைக்குளம், மதுரை
4. வடபழஞ்சி, மதுரை
5. நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி
6. கங்கைகொண்டான், திருநெல்வேலி
7. ஜாகீர் அம்மாபாளையம், சேலம்
8. விஸ்வநாதபுரம், ஓசூர்

எல்காட் நிறுவனம் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் (ELCOSEZs), அடிப்படைத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், கம்பிவடக் குழாய்கள், மழைநீர் வடிகால்கள், சுற்றுப்புறச் சுவர் போன்றவற்றை உருவாக்கி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT / ITeS) நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் நிலம்

ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில், எல்காட் நிறுவனம், சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர பிற இடங்களில் தகவல் தொழில்நுட்பக் கட்டடங்களைக் கட்டி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் அலுவலக இடத்தை ஒதுக்கீடு செய்கிறது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், மாநிலத்தில் கணிசமான முதலீடு, வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதிகளை ஈர்த்துள்ளன.

### 8.6.1. எல்கோசெஸ் (ELCOSEZ) சோழிங்கநல்லூர், சென்னை

எல்காட் நிறுவனம் சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.198.55 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கூடுதல்

உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.36.05 கோடி செலவில் 2019-2020-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 259 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிமிடெட் | 80 |
| 2 | எச்.சி.எல் | 50 |
| 3 | சத்யம் (டெக் மஹிந்த்ரா) | 50 |
| 4 | ஃபோர்டு மோட்டார் பிரைவேட் லிமிடெட் | 28 |
| 5 | காக்னிசன்ட் டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 20 |
| 6 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் | 15 |
| 7 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 16 |

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், 5 நிறுவனங்கள் 109.31 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, 57,525 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

- திருவாளர்கள் ஃபோர்ட் மோட்டார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் குளோபல் டெக்னாலஜி மற்றும் வணிக வளாகக் கட்டடம் கட்டி முடித்து, 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற, தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டில், 23.01.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, தற்போது இயங்கி வருகிறது.
- திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் மேலும் 9.50 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டுள்ளது.



**திருவாளர் எச்.சி.எல், எல்கோசெஸ் சோழிங்கநல்லூர், சென்னை**




**திருவாளர் போர்டு எல்கோசெஸ், சோழிங்கநல்லூர், சென்னை**

**படம் -2**

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 2.33 இலட்சம் சதுர அடி தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள், ரூ.83.73 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2020-ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 8.6.2. எல்கோசெஸ் (ELCOSEZ)- விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

எல்காட் நிறுவனம், கோயம்புத்தூரில் அமைந்துள்ள விளாங்குறிச்சி கிராமத்தில் 61.59 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.72.50 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 19 ஏக்கர் நிலம், பின்வரும் நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிமிடெட் | 9.5 |
| 2 | டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் | 9.5 |

இந்த இரண்டு நிறுவனங்கள், 23 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, 13,500 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.



திருவாளர்கள் விப்ரோ, எல்கோசெஸ், கோயம்புத்தூர்



படம் – 3 : திருவாளர்கள் டைடல்பார்க் கோயம்புத்தூர் லிமிடெட், எல்கோசெஸ், கோயம்புத்தூர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, எல்காட் நிறுவனம், 2.50 இலட்சம் சதுரடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை ரூ.110 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிட்டுள்ளது.

### 8.6.3. எல்கோசெஸ் (ELCOSEZ) - இலந்தைக்குளம், மதுரை

எல்காட் நிறுவனம், மதுரை மாவட்டம் இலந்தைக்குளம் கிராமத்தில், 28.91 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.34.41 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், பின்வரும் நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் 20.89 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட் | 11.25 |
| 2 | எச்.சி.எல் இன்ஃபோ சிஸ்டம்ஸ் லிமிடெட் | 6.75 |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 3 | செல்லா சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் | 2.25 |
| 4 | ரேபார் டிசைன் & டீடைல் பிரைவேட் லிமிடெட் | 6,000 சதுர அடி |
| 5 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 0.58 |

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட் மற்றும் எச்.சி.எல் இன்ஃபோசிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனம் ஆகியவை 7.06 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடப் பணிகளை முடித்து, 4,109 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள 60,205 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை 817 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | இட ஒதுக்கீட்டின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | கேலக்சி இன்ஃபோடெக் | 2,508 |
| 2 | ஏ.எம்.பி.சி. டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 3,277 |
| 3 | சாய் பி.பி.ஓ சர்வீசஸ் லிமிடெட் | 15,181 |
| 4 | நியாமோ என்டர்பிரைசஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 30,103 |
| 5 | சிவியாக் கன்சல்டிங் | 9,136 |

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், நிலம் மற்றும் கட்டடத்தில், 100 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




படம்- 4அ : எல்காட் தகவல் தொழில் நுட்பக் கட்டடம், எல்கோசெஸ், இலந்தைக்குளம், மதுரை



படம் -4ஆ: திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட், எல்கோசெஸ் இலந்தைதைக்குளம், மதுரை

### 8.6.4. எல்கோசெஸ்- வடபழஞ்சி, மதுரை

எல்காட் நிறுவனம் மதுரை வடபழஞ்சி கிராமத்தில், 245.17 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.66.51 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இதில், 213 ஏக்கர் நிலம், சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து பெற்றுள்ளது.



**படம் – 5:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மதுரை வடபழஞ்சியில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இரயில்வே மேம்பாலம் ஆகியவற்றை திறந்து வைத்தல்.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், எல்காட் நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து பெற்ற இடத்தில் 142 ஏக்கர் நிலத்தையும், சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத இடத்தில் 25 ஏக்கர் நிலத்தையும் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

**சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதிகள்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | எச்.சி.எல் | 60 |
| 2 | சத்யம் (டெக் மஹிந்த்ரா) | 50 |
| 3 | செயின்-சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் (பி) லிமிடெட் | 20 |
| 4 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் | 5 |
| 5 | காலிபர் பாய்ண்ட் | 5 |
| 6 | ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் | 2 |

**சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதி**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | எம்பயர் ஃபோட்டோ வோல்டிக் சிஸ்டம்ஸ் பி. லிமிடெட், சென்னை | 25 |

70,139 சதுர அடி பரப்பளவுள்ள நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பக் கட்டடம், எல்காட் நிறுவனத்தால், ரூ.23 கோடி முதலீட்டில் கட்டப்பட்டு 05.03.2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



**படம்** – 6: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மதுரை வடபழஞ்சியில் எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைத் திறந்து வைத்தல்

இந்த தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான நம்பிக்கை இணையம் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), பொருட்களின் இணையம் (IoT - Internet of Things), இயந்திரக் கற்றல் (Machine Learning), ஆளில்லா குறு விமானங்கள் (Drones), மிகைநிகர் உண்மை (Augmented Reality) / மெய்நிகர் உண்மை (Virtual Reality), ரோபோட்டிக்ஸ் (Robotics), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics) ஆகியவற்றிற்கான ஒரு தொழில்நுட்பக் கருத்துக்களம் (Tech Forum) அமைக்கப்பட உள்ளது.



படம் – 7 : எல்காட் தகவல்தொழில்நுட்பக் கட்டடம் எல்கோசெஸ், வடபழஞ்சி, மதுரை

### 8.6.5. எல்கோசெஸ் (ELCOSEZ) - நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

எல்காட் நிறுவனம், நவல்பட்டு கிராமம், திருச்சியில் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.60.08 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இதில், 123.23 ஏக்கர் பரப்பளவிற்குச் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், எல்காட் நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து பெற்ற இடத்தில் 34 ஏக்கர் நிலத்தையும், சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத இடத்தில் 2 ஏக்கர் நிலத்தையும் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

**சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதி**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் | 10 |
| 2 | டபிள்யு என்.எஸ். குளோபல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 5 |
| 3 | ஜைலாக் சிஸ்டம்ஸ் லிமிடெட் | 5 |
| 4 | அன்லிமிடெட் இனொவேஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் | 5 |
| 5 | அசிஸ்ட் இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் | 3 |
| 6 | ஐ.லிங்க் மல்டிடெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 2 |
| 7 | விடார்ட் டெக்னாலஜிஸ் | 2 |
| 8 | ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் | 2 |

**சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதி**

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்)** | **நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1 | எச்.சி.எல் இன்ஃபோசிஸ்டம்ஸ் | 2 |

- இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள **59,960** சதுர அடி பரப்பளவு கொண்ட தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில், பின்வரும் நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை 1,535 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்)** | **இட ஒதுக்கீட்டின் அளவு (சதுர அடியில்)** |
|---|---|---|
| 1 | ஐ.லிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் | 6,668 |
| 2 | சயின்டிபிக் பப்ளிஷிங் நிறுவனம் | 30,250 |
| 3 | வுரம் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5,976 |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | இட ஒதுக்கீட்டின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 4 | விடார்ட் டெக்னாலஜிஸ் | 3,643 |
| 5 | தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் | 5,963 |
| 6 | ஜிஜ டெக் கேமிங் கோ. இண்டியா பிரைவேட் லிமிடெட் | 4,919 |
| 7 | விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 2,541 |

- இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள எல்காட் நிறுவனத்தின் கட்டடத்தில் 100 சதவிகித இடம் வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





படம்- 8 : எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம், எல்கோசெஸ் நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி, எல்காட் நிறுவனம், ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில், ரூ.40 கோடி மதிப்பீட்டில் ஒரு தகவல் தொழில்நுட்பக் கட்டடம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

### 8.6.6. எல்கோசெஸ் (ELCOSEZ) - கங்கைகொண்டான், திருநெல்வேலி

எல்காட் நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில், 500 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.55.88 கோடி முதலீட்டில், ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இதில் 290 ஏக்கர் பரப்பளவிற்குச் சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. இதில், 56,720 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள எல்காட் நிர்வாக மற்றும் தொழில்நுட்பக் கட்டடம் ஒதுக்கீட்டிற்குத் தயாராக உள்ளது.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், எல்காட் நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டல

அந்தஸ்து பெற்ற இடத்தில் 112 ஏக்கர் நிலத்தையும், சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத இடத்தில் 25 ஏக்கர் நிலத்தையும் பின்வரும் நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

**சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதி**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (அடோஸ் சின்டெல்) | 100 |
| 2 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் | 10 |
| 3 | டெக்கான் ஐ சர்வீசஸ் | 2 |

## சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதி

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | ஏ அன்ட் டி காஸ்மிக் பவர் | 25 |

திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (அடோஸ் சின்டெல்) 2.60 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி 29.04.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.



**படம்-9 அ: திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (அடோஸ் சின்டெல்) எல்கோசெஸ் கங்கைகொண்டான்**



**படம் -9ஆ : தகவல் தொழில்நுட்பக் கட்டடம், எல்கோசெஸ், கங்கை கொண்டான், திருநெல்வேலி**

### 8.6.7. எல்கோசெஸ் - ஜாகீர்அம்மாபாளையம், சேலம்

எல்காட் நிறுவனம், ஜாகீர்அம்மாபாளையம் கிராமம், சேலத்தில் 53.33 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.40.53 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

எல்காட் நிறுவனம், இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 27.62 ஏக்கர் நிலத்தைப் பின்வரும் நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மகிமா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 3 |
| 2. | வீ. டெக்னாலஜிஸ் | 9.49 |
| 3. | ஜி.டி.பி இன்ஃபோடெக் சொல்யூஷன்ஸ் லிமிடெட் | 2.5 |
| 4. | செனோவெட் இன்ஃபோடெக் பிரைவேட் லிமிடெட் | 1.25 |
| 5. | தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் | 7.88 |
| 6. | இ-முத்ரா லிமிடெட் | 2.5 |
| 7. | அன்மால் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 1 |

வீ. டெக்னாலஜிஸ் நிறுவனம், 20,000 சதுர அடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் கட்டி முடித்து 300 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது.



**படம் – 10:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சேலம் ஜாகீர் அம்மா பாளையத்தில் எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்தல்.

62,174 சதுர அடி கொண்ட எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 34,050 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | இட ஒதுக்கீட்டின் அளவு (சதுரடியில்) |
|---|---|---|
| 1 | செனோவெட் இன்ஃபோடெக் பிரைவேட் லிமிடெட் | 3,500 |
| 2 | மெம்சிஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், | 3,448 |
| 3 | வீ இமேஜிங் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 10,562 |
| 4 | நாலெட்ஜ் லென்ஸ் பிரைவேட் லிமிடெட் | 1,000 |
| 5 | டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்எல்பி | 1,000 |
| 6 | ஸ்டின் சாஃ;ப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 989 |
| 7 | வீ. டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 10,562 |
| 8 | இமுத்ரா லிமிடெட் | 2,989 |



**படம் – 11அ : எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம், ஜாகீர் அம்மா பாளையம்**



**படம் – 11ஆ : எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம், ஜாகீர் அம்மா பாளையம்**

### 8.6.8. எல்கோசெஸ்- விஸ்வநாதபுரம், ஓசூர்

எல்காட் நிறுவனம் விஸ்வநாதபுரம் கிராமம், ஓசூரில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.41.75 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கூடுதல் உட்கட்டமைப்புப் பணிகள் தற்போது ரூ. 2.56 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் எல்காட் நிறுவனம், 15 ஏக்கர் நிலத்தைப் பின்வரும் நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | ஓகாயா இன்ஃபோகாம் பிரைவேட் லிமிடெட் | 10 |
| 2 | சி.ஆர்.எம். ஐ.டி.சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 3 |
| 3 | சி.ஆர்.எம் இன்ஃபோடெக் இந்தியா பிரைவேட் லிமிடெட் | 2 |



**படம் – 12** : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓசூர் வில்வநாதபுரத்தில் எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 62,100 சதுர அடி பரப்பளவு கொண்ட தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் 45,661 சதுர அடி இடம் பின்வரும் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | இட ஒதுக்கீட்டின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | எம்ஸ்டீல் டிடெய்லிங் சர்வீசஸ் | 3,461 |
| 2 | சந்து சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 6,961 |
| 3 | விஷன் பிளஸ் செக்யூரிட்டி கண்ட்ரோல் பிரைவேட் லிமிடெட் | 14,139 |
| 4. | யூ. எஸ். டெக்னாலஜி இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் | 21,100 |




**படம் – 13** : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓசூர் விஸ்வநாதபுரத்தில் எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.



**படம் – 13: எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம், விஸ்வநாதபுரம், ஓசூர்**


எல்காட் நிறுவனம் மற்றும் தமிழக அரசு எடுத்துள்ள முயற்சிகளினால், முதலீடுகள், ஏற்றுமதிகள் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஒரு ஏறுமுக நிலை ஏற்பட்டுள்ளது.

### 8.6.9. எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் முதலீட்டின் விவரங்கள் பின்வருமாறு:-





**படம் – 14 :ஆதாரம்: இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம்**

## 8.6.10. எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் ஏற்றுமதி விவரங்கள் பின்வருமாறு:-




படம் – 15 ஆதாரம் : இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம்

### 8.6.11. எல்கோசெஸ் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களின் வேலைவாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு:-




படம் – 16: ஆதாரம்: இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம்

### 8.7. தொழில்முனைவோர் மையம், சென்னை மற்றும் கோயம்புத்தூர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இளைஞர்களின் தொழில் முனைவுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் எல்காட் நிறுவனம்,

சென்னையிலுள்ள டைடல் பார்க்கில் 90 இருக்கை வசதி கொண்ட தொழில் முனைவோர் மையத்தை 6,860 சதுர அடி நிலப்பரப்பில் ரூ.3.53 கோடி முதலீட்டில் அமைத்துள்ளது.

இதில், தற்போது 10 நிறுவனங்கள் (Startups) இயங்கி வருகின்றன. மேலும் 23 நிறுவனங்கள் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு தொடக்க நிலையிலிருந்து விடுபட்டுத் தொழில் முனைவோர் மையத்திலிருந்து வெளியேறி உள்ளன.



படம் – 17: தொழில்முனைவோர் மையம்

50 இருக்கை வசதி கொண்ட ஒரு தொழில்முனைவோர் மையம் ரூ.2.07 கோடி முதலீட்டில் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட், கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த தொழில்முனைவோர் மையத்திற்கு 'நாஸ்காம்' நிறுவனம் ஒரு அறிவுசார் பங்குதாரராகச் செயல்படுகிறது.

## 8.8. நிதி தொழில்நுட்பச் சிறப்பு மையம் (FinTech Centre of Excellence)

நிதி தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, முதலீடு, வேலைவாய்ப்பு, நிதி மேம்படுத்துதல் ஆகிய துறைகளில், தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குவதற்கு, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் 2018-ஆம் ஆண்டில் அறிவித்தபடி, சென்னையில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (STPI) உடன் இணைந்து, ஒரு நிதி தொழில்நுட்பச் சிறப்பு மையம் ரூ.23.00 கோடி முதலீட்டில் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதில், இந்திய அரசு ரூ.5.75 கோடியும், தமிழக அரசு ரூ.5.75

கோடியும் மற்றும் தனியார் துறை ரூ.11.50 கோடியும் முதலீடு செய்துள்ளன.

## 8.9. மதுரையில் தொழில்நுட்பக் கருத்துக்களம் (Tech Forum at Madurai)

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் 2018-ஆம் ஆண்டின் அறிவிப்பின்படி, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான நம்பிக்கை இணையம் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரக் கற்றல் (Machine Learning), ஆளில்லா குறு விமானங்கள் (Drones), மிகைநிகர் உண்மை (Augmented Reality) / மெய்நிகர் உண்மை (Virtual Reality), ரோபோட்டிக்ஸ் (Robotics), பொருட்களின் இணையம் (IoT - Internet of Things), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics) ஆகியவற்றிற்கான ஒரு தொழில்நுட்பக் கருத்துக்களம் (Tech Forum) மற்றும் ஒரு தயாரிப்புக் கண்டுபிடிப்பு மையம் ஆகியவற்றை மதுரை வடபழஞ்சியில் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 8.10. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு என்பது மக்களுக்கான தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்கவும் மற்றும் அரசுத் துறைகளுக்கிடையேயான நிர்வாக முறையைப் பராமரிப்பதற்கான அடித்தளக் கட்டமைப்பு ஆகும். இது அனைத்து வன்பொருள், மென்பொருள், வலையமைப்பு, பயன்பாடுகள் மற்றும் தரவுத்தளங்களின் ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஆகும். அதிகரித்து வரும் தகவல் தொழில்நுட்பச் சூழ்நிலையில், அரசுத் துறைகள் தங்கள் சேவைகளைத் தகவல் தொழில்நுட்பச் செயல்முறைகளின்படி வழங்கிப் பராமரித்து வருகின்றன.

மேற்காணும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் எல்காட் நிறுவனம் பின்வரும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளை நிறுவிச் செயல்படுத்தி வருகிறது.

### 8.10.1. இணைப்புச் சேவைகள்

#### அ) தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு 01.12.2007 அன்று மத்திய மாநில அரசுகளின் பங்கேற்புடன் நிறுவப்பட்டது. தற்போது இந்தத் திட்டம் மாநில அரசின் நிதியளிப்புடன் இயங்குகிறது.

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்புத் திட்ட விவரங்கள்

| விவரம் | காலம் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| முதலாம் கட்டம் (Phase-1) | 01.12.2007 முதல் 30.11.2012 வரை | 140.25 |
| இடைக்காலம் (Interim Period) | 01.12.2012 முதல் 08.09.2013 வரை | 16.42 |
| இரண்டாம் கட்டம் (Phase-2) | 09.09.2013 முதல் 08.09.2016 வரை | 74.69 |
| இடைக்கால செயற்பாடுகள் (Interim period operations) | 09.09.2016 முதல் 13.02.2019 வரை | 52.73 |
| இரண்டாம் கட்டம் விரிவு (Phase-2) (Extension) | 14.02.2019 முதல் 13.02.2022 வரை | 69.90 |

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு 708 இருப்பு முனைகளுடன் (POP) தொடங்கப்பட்டது, தற்போது 821 இருப்பு முனைகளுடன் இயங்கி வருகிறது. வலையமைப்பு இயக்க மையம் (Network Operations Centre - NOC) எல்காட், பெருங்குடியில் அமைந்துள்ளது.

**தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம்**

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம் அரசின் அனுமதி பெற்று பிப்ரவரி 2019 முதல் தற்போதைய வன்பொருள் கட்டமைப்புடன் மேலும் மூன்றாண்டுகள் இயங்குமாறு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அலைக்கற்றைச் சேவைக்காக பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பை இயக்கிப் பராமரிப்பு செய்வதற்காக ஒருங்கிணைப்பு நிறுவனம் (System Integrator) ஒன்று தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு அரசுத் துறைகளுக்குக் குரல், தரவு மற்றும் காணொளிச் சேவைகளை வழங்குவதன் மூலம், அரசுத் துறைகள் மக்களுக்கான தரமான சேவைகளை வழங்க வழி வகை செய்து வருகிறது.



**படம் – 18: ) தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு அறை (TNSWAN Network Room)**



படம் 19: இயக்க மையம் (Network Operations Centre)

## ஆ. தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு (National Knowledge Network)

தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (NKN), நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களையும், கல்லூரிகளையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் இணைக்கும் நோக்கில், உருவாக்கப்பட்ட ஜிகா-பிட் வலையமைப்பு ஆகும். தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்

ஆகிய இரண்டும் 1 Gbps வேகம் கொண்ட NKN வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழக அரசுத் துறைகள் தேசிய அளவில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ள மென்பொருள் பயன்பாடுகளைத் தொடர்பு கொள்ளலாம். தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் மாவட்ட இருப்பு முனைகள் அனைத்தும் அதிக பட்சமாக 1 Gbps அளவிலான அதிவேக அலைக்கற்றையைப் பெற ஏதுவாக NKN வலையமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**இ. தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பிற்கான பதிலி இணைப்பு (Redundant Connectivity)**

வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட (Tier 2) இருப்பு முனைகளுக்கான, முதன்மை இணைப்பு (Primary Connectivity) BSNL நிறுவனம் மூலம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநிலப் பெரும் பரப்பு வலையமைப்பின் பயனர்களுக்குத்

தடையற்ற இணைப்பினை வழங்குவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு 210 இரண்டாம் கட்ட இருப்பு முனைகளில் பதிலி இணைப்பாக 2 Mbps MPLS – VPN (1:1) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**ஈ. இதர இணைப்புச்சேவைகள்**

**i) MPLS VPN (1:1) இணைப்பு**

MPLS VPN (1:1) இணைப்பானது TNSWAN செங்குத்து இருப்புமுனைகளுக்கான பதிலி இணைப்பாக மட்டுமல்லாமல் அரசு துறைகளின் தேவைக்கேற்ப அரசு அலுவலகங்களிலும் உறுதியளிக்கப்பட்ட அலைக்கற்றைச் சேவையை வழங்கி வருகிறது. எல்காட் நிறுவனம் ஏறத்தாழ 100 அரசு அலுவலகங்களுக்கு MPLS VPN இணைப்பை வழங்கி வருகிறது.

**ii) இணைய க் குத்தகை இணைப்பு (1:1) (Internet Leased Line)**

இணையக் குத்தகை இணைப்பானது உறுதி செய்யப்பட்ட இணைய அலைக்கற்றைத் தேவைகளைப்

பூர்த்தி செய்யவல்லது. எல்காட் நிறுவனம் ஏறத்தாழ 230 அரசு அலுவலகங்களுக்கு இணையக் குத்தகை இணைப்புச் சேவைகளை வழங்கி வருகிறது.

**iii) VPNoBB இணைப்பு**

VPNoBB இணைப்பு குறைந்த செலவில் அகஇணைய (Intranet) அலைக்கற்றைச் சேவையைத் தரவல்லது. எல்காட் நிறுவனம் ஏறத்தாழ 600 அரசு அலுவலகங்களுக்கு VPNoBB இணைப்புச் சேவைகளை வழங்கி வருகிறது.

**8.10.2. பதிவேற்றம் மற்றும் தொடர்புடைய சேவைகள்**

தேசிய மின்ஆளுமைத் திட்டத்தின் (NeGAP) கீழ் மாநிலத்தின் மின் ஆளுமைச் சேவைகளைப் பாதுகாப்பான முறையில் வழங்குவதற்கான மிக முக்கியமான கட்டமைப்பாகத் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தரவு மையமானது அரசுத்துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் தங்களது பயன்பாட்டு மென்பொருட்களைப் பொதுவான, மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்வதன் மூலம் எளிய ஒருங்கிணைப்புக்கும், சிறப்பான நடைமுறைப்படுத்தலுக்கும் உதவிகரமாக உள்ளது. தமிழ்நாடு மாநிலத் தரவுமையம் திறன்மிகு செயல்பாடு மற்றும் மேலாண்மைக் கட்டுப்பாட்டினை வழங்குகிறது. மேலும், தரவு மேலாண்மை, தகவல் தொழில்நுட்பவியல் (IT) மேலாண்மை, நடைமுறைப்படுத்தல், மின்சாரத் தேவை மற்றும் பிற செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த செலவினத்தைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

TNSDC பதிவேற்ற சேவைகளுடன் கூடுதலாக, தற்போது பேரிடர்மீட்பு (Disaster Recovery), மேகக் கணினி அமைப்புச் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பப்

பாதுகாப்புச் சேவைகளை எல்காட் நிறுவனம் வழங்கி வருகிறது.

### 8.10.2.1. பதிவேற்றச் சேவைகள்

#### i) தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-I (TNSDC- I)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், முதல் தளத்தில் 40 அடுக்குகள், தரைத்தளத்தில் 22 அடுக்குகள் விரிவாக்கம் (expansion) மற்றும் BSNL தரவு மையத்தில் 25 அடுக்குகள் நீட்டிப்பு (extension) கொண்டது. தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் நாட்டிலேயே ISO சான்றிதழ் பெற்ற முதல் மாநிலத் தரவு மையம் ஆகும் (21.02.2012 அன்று ISO சான்றிதழ் முதன்முதலாகப் பெறப்பட்டது). இம்மையத்தின் செயற்பாடுகள் 01.08.2011 அன்று ரூ138.00 கோடியில் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது வரை, 160-க்கும் மேற்பட்ட பயன்பாடுகள் / சேவைகள் TNSDC - I -இல் இணை-இடம் / இணை-பதிவேற்றம் மற்றும் மேகக் கணினி அமைப்புப் பதிவேற்றம் போன்ற முறைகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.



படம் 20: தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-I

### ii) தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-II (TNSDC-II)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் முதல் பகுதி 100 சதவிகிதம் பயன்பாட்டுக்கு வந்துவிட்டதால், இரண்டாம் பகுதி ரூ74.70 கோடி செலவினத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கட்டட வேலைகள் நிறைவு பெற்று தகவல் தொழில்நுட்ப (IT) மற்றும் இதர

தொழில்நுட்ப (Non-IT) சாதனங்களுடன் தரவு மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



படம் 21: தமிழ்நாடு மாநில தரவு மையம்-II

### 8.10.2.2. பேரிடர் மீட்புச் சேவைகள்

**அ) தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC), எல்கோசெஸ், திருச்சிராப்பள்ளி.**

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத் துறைகளின் பணிகள் மற்றும் மின்ஆளுமைப் பயன்பாடுகள், சாதாரண நேரங்கள் மற்றும் பேரிடர்களின் போதும் தடையின்றித் தொடர்ச்சியாக நடைபெற ஏதுவாக, மாறுபட்ட நில அதிர்வு மண்டலத்தில், ELCOSEZ திருச்சிராப்பள்ளியில் தரவுகள் மற்றும் சேவைகளுக்கான பேரிடர் மீட்பு மையம் ரூ.59.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 09.02.2018 முதல் தனது செயல்பாட்டினைத் தொடங்கியது. இந்த மையம், அரசுத் துறைகளின் பதிவேற்றத் (Hosting) தேவைகளையும் நிறைவேற்றும்.



படம் – 22: திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையத் திறப்பு விழா

**ஆ) அருகாமை பேரிடர் மீட்பு மையம் (NLDRC), சென்னை**

அரசுத் துறைகளின் தரவுகளை உடனுக்குடன் பிரதி எடுத்து மீட்கும் பொருட்டு, சென்னையில் அமைந்துள்ள BSNL நிறுவனத்தின் தரவு மைய உட்கட்டமைப்பு வசதிகளைகப் பயன்படுத்தி ரூ.5.00 கோடி செலவில், அருகாமை தரவு மீட்பு மையம் 20.06.2016-இல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

**8.10.2.3. தமிழ்நாடு மேகக்கணினி அமைப்பு சேவைகள்**

மின்ஆளுமைப் பயன்பாடுகளை விரைவில் செயல்படுத்தும் வகையில், எளிய மேலாண்மையுடன், பகிர்ந்து கட்டமைக்கக் கூடிய மேகக்கணினியமைப்பு தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மேகக்கணினி அமைப்பில் உட்கட்டமைப்பு (Infrastructure), இயங்குதளம் (Platform) மற்றும் பொதுநிலை மென்பொருள் (Open source software) ஆகிய சேவைகளைப் பெறலாம். இந்த மேகக்கணினி அமைப்பு 01.03.2016-இல், ரூ.11.39 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு 50-க்கும் மேற்பட்ட மென்பொருள்

பயன்பாடுகள் மற்றும் சேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.



படம் 23: தமிழ்நாடு மேகக்கணினி அமைப்பு

### 8.10.3. மின்புலப் பாதுகாப்புச் சேவைகள்

**அ) தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்திற்கான பாதுகாப்புக் கட்டமைப்பு**

அனைத்து அரசுத் துறைகளின் மென்பொருள்கள்/ சேவைகளின் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்ய உயர்நிலைப் பாதுகாப்புக் கட்டமைப்பு நடைமுறை (High level Security Architecture Framework) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்திற்குப் பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு

**மேலாண்மை** (Security Information and Event Management - SIEM) **மற்றும் நிகழ்நிலைப் பாதுகாப்பு மதிப்பீடு கணிப்பு மற்றும் ஊடுருவல் சோதனை** (Vulnerability Assessment & Penetration Testing – VAPT) **போன்ற பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.**





**படம் – 24: தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்திற்கான பாதுகாப்புக் கட்டமைப்பு**

## ஆ) தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA-TN)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ், 01.06.2018 அன்று அறிவித்தபடி, எல்காட் நிறுவனம், ரூ.21.39 கோடி செலவில் CDAC நிறுவனத்துடன் இணைந்து தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA-TN) ஒன்று உருவாக்க உள்ளது. அரசுத் துறைகளின் அனைத்து முக்கிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளையும் மாநிலத்தின் மின்-ஆளுமைச் சேவைகளையும் உயர்பாதுகாப்புடன் பராமரிக்க இத்திட்டம் வழிவகை செய்யும்.

தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA-TN) கூறுகள்:-

- (i) தமிழ்நாடு இணைய இடர்பாடு மேலாண்மைத் திட்டம் (CCMP-TN)
- (ii) தமிழ்நாடு கணினி நெருக்கடிநிலை பதிலி குழு (CERT-TN)
- (iii) தமிழ்நாடு பாதுகாப்பு இயக்க மையம் (SOC-TN)
- (iv) தமிழ்நாடு பாதுகாப்புக் கட்டமைப்பு நெறிமுறை (SAF-TN)




**படம் – 25 : தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு**

## 8.11. மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

மாநிலத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு "தனக்கே உரிய மடிக்கணினி" எனும் கனவை நனவாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இத்திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 15.09.2011 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.



**படம் – 26:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2018 - 19 ஆம் கல்வியாண்டு மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை துவக்கிவைத்து வழங்கினார்கள்.

**வழங்கப்பட்ட மடிக்கணினிகளின் எண்ணிக்கை**

| வரிசை எண் | கல்வி ஆண்டு | கொள் முதல் செய்யப்பட்ட மடிக்கணினிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மடிக்கணினிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 8,98,866 | 8,98,866 |
| 2 | 2012-13 | 7,56,000 | 7,56,000 |
| 3 | 2013-14 | 5,65,000 | 5,65,000 |
| 4 | 2014-15 | 4,96,999 | 4,96,999 |
| 5 | 2015-16 | 5,19,029 | 5,19,029 |
| 6 | 2016-17 | 5,58,218 | 5,58,218 |
| 7 | 2017-18 (பகுதி) | 59,460 | 59,460 |

இத்திட்டத்தின்படி, இதுவரை 38,53,572 மடிக்கணினிகள், 2017-2018 ஆம் கல்வி ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளன. 2017-2018 (பகுதி) மற்றும் 2018-2019 கல்வி ஆண்டுகளுக்காக, 15,66,022 மடிக்கணினிகள் கொள்முதல் செய்ய உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் உறுதி செய்யப்பட்டு மார்ச் 2019 முதல் தொடங்கப்பட்ட மடிக்கணினிகள் வழங்கும் பணி, அக்டோபர் 2019இல் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 30.06.2019

வரை, 11,13,204 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

### 8.12. மின் ஆளுமை

#### 8.12.1. முக்கிய மின்-ஆளுமைத் திட்டங்கள்

எல்காட் நிறுவனம் 1996 ஆம் ஆண்டு முதல் மின் ஆளுமையை வெற்றிகரமாகச் செயல்படுத்த, குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரசுத் துறைகளுக்காக இணைய தளங்களையும், மென்பொருள் செயலிகளையும் உருவாக்கி வழங்கி வருகிறது.

| வ. எண் | துறை | திட்டம் | திட்ட மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | வேளாண்மைத் துறை | விதை உற்பத்தி அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை (SPECS) திட்டம் | 11,40,000/- |
| 2 | கூட்டுறவுத் தணிக்கைத் துறை மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமைத் திட்டம் | 46,10,000/- |

| வ. எண் | துறை | திட்டம் | திட்ட மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 3 | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குனரகம் | பயிற்சிப் பிரிவு - இணையம் வழி சேர்க்கை முறை | 35,38,000/- |
| 4 | மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை | மதிப்பாய்வு / கணக்கெடுப்பு செயலி முனையம் | 15,22,000/- |
| 5 | தமிழ் நாடு மின்சார ஆய்வாளர் அலுவலகம் | இணைய வழி மின்தூக்கி உரிம மேலாண்மை மற்றும் இணைய வழி மின்சார உற்பத்தி வரி தாக்கல் | 13,87,000/- |
| 6 | தோட்டக்கலை இயக்குனரகம் | இணைய வழிப் பண்ணை மேலாண்மைத் திட்டம் | 7,47,000/- |
| 7 | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் (DISH) | இணைய முனையம் | 27,88,075/- |
| 8 | நகர ஊரமைப்பு இயக்ககம் (DTCP) | கட்டட வரைபட ஆய்வு மற்றும் அனுமதி- தானியங்கு முறை – மின்னணுத் தீர்வு | 49,20,016/- |
| 9 | தொல்லியல் துறை | புவிசார் தகவல் அமைப்புடன் கூடிய இணைந்த மெய் நிகர் இணைய சுற்றுலா. | 24,44,024/- |

### 8.12.2. அனைத்திந்தியப் பணி அலுவலர் முனையம்

அனைத்திந்தியப் பணிகளில் உள்ள அலுவலர்கள் மடிக்கணினி (laptop) / கைக்கணினி (tablet) / ஐ பேட் (IPad) ஆகியவற்றைப் பெறுவதற்கான தங்களது விருப்பத் தேர்வைப் பதிவு மற்றும் கொள்முதல் செய்ய ஏதுவாக https://www.elcot.in/aislaptop/ais_cart என்ற இணைய தளத்தை எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதன் வாயிலாக அனைத்து இந்திய அரசுப்பணி அலுவலர்கள் இணையம் வழியாக தங்களது விருப்பத் தேர்வினைத் தெரிவிக்கவும், அரசு ஒப்புதல் அளித்த தொகையை விடக் கூடுதலாக ஏற்படும் தொகையினைச் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த முனையத்துடன் குறுஞ்செய்தி (SMS), மின்னஞ்சல் (e-Mail) மற்றும் மின்பணம் செலுத்தும் தளம் (Payment Gateway) ஆகியவை ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

### 8.12.3. அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்ட இணையதளங்கள்:

1. பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பாதுகாப்பு ஆணையம்
2. தமிழ் நாடு வனத் துறை
3. தமிழ் நாடு தோட்டக் கலைத் துறை
4. நிதித் (BC) துறை
5. தமிழ் நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்
6. ஆதி திராவிடர் நல வாரியம்
7. தொல்லியல் துறை
8. அரசு அருங்காட்சியகம்
9. தகவல் தொழில் நுட்பவியல் துறை
10. தமிழ் நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்
11. கலை மற்றும் பண்பாட்டுத் துறை

### 8.12.4. தமிழ்நாடு அரசின் வெளிப்படை அரசுத் தரவுகள்:

தமிழக அரசின் வெளிப்படைத் தரவுகளுக்கு ஆதரவளிக்கும் இயங்குதளம் (OGD) வெளிப்படை அரசு தரவுத் தளமாகும்.

தமிழக அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவை தங்களது தரவுகள், ஆவணங்கள், சேவைகள், கருவிகள் மற்றும் மென் செயலிகள் ஆகியவற்றைப் பொது மக்கள் பயன்பாட்டிற்காக வெளியிடலாம். இது தொடர்பாக, மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் இத்துறையின் 2017-18-இல் மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டார்.

அரசு வெளிப்படைத் தரவுகளுக்கான மாநில நிகழ்வு உருவாக்கப்பட்டு https://tn.data.gov.in/ என்னும் இணைய முகவரியில் இயங்கி வருகின்றது. 43 எண்ணிக்கையிலான தமிழக அரசுத் துறைகள் /

முகமைகள் தொடர்பான 12,200 தரவுத் தொகுப்புகள் தற்போது இந்த இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. 81 தலைமைத் தரவு அலுவலர்களின் பதிவேற்றம் முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஆதார் சேர்க்கை மையங்கள் (PEC Centres List) மற்றும் தமிழ்நாடு மருத்துவ ஊடு கதிர்ப் பட மையங்கள் (Scan Centres established by TNMSC) ஆகியவற்றுக்காக இரண்டு கைபேசிச் செயலிகள் முறையே உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.2.11 கோடி ஆகும்.

### 8.12.5. ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) அங்கீகரிக்கப்பட்ட முகமைகளுள் ஒன்றான எல்காட் நிறுவனம் ஆதார் பதிவு நடவடிக்கைகளைச் செயல்படுத்துகிறது. தற்போது, எல்காட் நிறுவனம் 214 நிரந்தரப் பதிவு மையங்களைப் பின்வரும் இடங்களில் ஏற்படுத்தியுள்ளது.

- மாவட்ட ஆட்சியரகங்கள் - 32
- மாநகராட்சித் தலைமை அலுவலகங்கள் -11
- மாநகராட்சி மண்டல அலுவலகங்கள்-45
- நகராட்சிகள் -124
- வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் -2

இந்த மையங்கள் 03.10.2016 முதல் தொடங்கப்பட்டு, தற்பொழுது பின்வரும் சேவைகளைப் பொது மக்களுக்கு வழங்கி வருகின்றன.

1. ஆதார் பதிவு
2. 5 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான கட்டாய உயிரி அளவை (Mandatory Biometric) தரவு மேம்பாடு
3. குடிவிவரவியல் (Demographic) மேம்பாடு (அனைத்து வகை / அனைத்து வழிகள்)
4. eKYC (Know Your Customer) பயன்படுத்தி ஆதார் பதிவு தேடல் / ஆதார் தேடல் / வேறு வகையான


கருவிகள் மற்றும் A4 தாளில் கருப்பு வெள்ளையில் அச்சிட்டு வழங்குதல்

5. தவறவிட்ட ஆதார் பதிவினைத் தரவுகளிலிருந்து தேடி எடுத்தல்.

தினந்தோறும் 6000 முதல் 8000 எண்ணிக்கையிலான குடிமக்கள் இந்த மையங்களின் வழியாகப் பயன்பெறுகின்றனர்.

**30.06.2019 வரை செய்யப்பட்ட ஆதார் பதிவு விவரங்கள்:**


| வ. எண் | விவரங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆதார் சேர்க்கைப் பதிவு | 16,53,419 |
| 2 | ஆதார் திருத்தம் | 25,65,169 |
| | **மொத்தம்** | **42,18,588** |




**படம் – 27**

## ஆதார் சேர்க்கை மொத்த அறிக்கை:

| வ. எண் | வருடம் | ஆதார் சேர்க்கைப் பதிவுகளின் எண்ணிக்கை | ஆதார் திருத்தம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அக்டோபர் 2016 முதல் மார்ச் 2017 முடிய | 5,40,741 | 17,764 |
| 2 | ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 முடிய | 6,71,052 | 9,43,269 |
| 3 | ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 முடிய | 3,63,500 | 13,21,729 |
| 4 | ஏப்ரல் 2019 முதல் ஜூன் 2019 முடிய | 78,126 | 2,82,407 |
| | மொத்தம் | 16,53,419 | 25,65,169 |




**படம் – 28**

**சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் 385 வட்டாரங்களில் எல்காட் நிறுவனத்தால் ஏற்படுத்தப்படவுள்ள நிரந்தரப் பதிவு மையங்கள்:**

பள்ளி மாணவ மாணவிகளின் நலனுக்காக, 120 வட்டாரங்களில் தலா 2 சேவை முகப்புகளும், 265 வட்டாரங்களில் தலா 1 சேவை முகப்பும் உள்ள வகையில், 385 வட்டாரங்களில் ஆதார் பதிவு மையங்களை எல்காட் நிறுவனம் ஏற்படுத்த, சமக்ரா சிக்ஷா சார்பில் திட்ட அறிக்கையினை வழங்க எல்காட் நிறுவனத்தைக்

கோரியுள்ளது. மிக விரைவில், எல்காட் நிறுவனம் இம்மையங்களை உருவாக்கும்.

### 8.12.6. மின் திறன் வகுப்பறைகள்

திறன் வகுப்பறைகள் என்பன மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வகுப்பறைகள் ஆகும். இவை புதிய முறை கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான அனுபவ அறிவினை ஆசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் அளிக்கின்றது.

இந்தத் திறன் வகுப்பறைகள் பின் வருவனவற்றைக் கொண்டதாகும்

- கவரக்கூடிய மற்றும் பயன்தரக்கூடிய பல்லூடகக் காட்சிகள்
- இருபரிமாண / முப்பரிமாண உயிரோட்டமான டிஜிட்டல் உள்ளடக்கங்கள்
- உலகத்தரம் வாய்ந்த கற்றல் சூழல்

ஊடாடும் (Interactive) வெண் பலகைகள், வன் / மென் பொருட்கள், பல்லூடக உள்ளடக்கங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தல், நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை மின் திறன் வகுப்பறைகள்

திட்டத்தில் அடங்கும். ஆசிரியர்களுக்கான பயிற்சியுடன் உயர் நிலை, மேல்நிலை மற்றும் உறைவிடப் பள்ளிகளில் வன் / மென் பொருட்களுக்குப் பராமரிப்பு சேவை ஆகியன வழங்கப்படும். அரசினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் பாடத்திட்ட மாற்றங்களுக்கு ஏற்ப, பல்லூடக உள்ளடக்கங்களில் மாற்றங்களும், மேம்பாடுகளும் செய்யப்படும். எல்காட் நிறுவனம் இதுவரை 256 பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை மின்திறன் வகுப்பறைத் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது.



**படம் – 29: ஆதி திராவிடர் நலத்துறை, மின் திறன் வகுப்பறை, ஆத்தூர், சேலம்**

### 8.13. அம்மா அழைப்பு மையம் (ACC)

"1100" என்ற கட்டணமில்லாத் தொலைபேசி வசதியுடன் 19.01.2016 அன்று தொடங்கப்பட்ட அம்மா அழைப்பு மையம் (24X7) தொடக்கத்தில் பொதுத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்தது. 15.02.2018 முதல் இம்மையம் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படத் துவங்கியது. பொதுமக்கள் தங்கள் புகார்கள்/ கோரிக்கைகளை எப்பொழுதும், எங்கிருந்தும் அலைபேசி வழியாகத் தெரிவிப்பதற்கு இம்மையம் ஏதுவாக உள்ளது. இம்மையத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள முகவர்கள் அழைப்புகளை ஏற்று, ஒவ்வொரு புகாருக்கும் எண் ஒதுக்கீடு செய்து, பதிவு செய்கின்றனர். புகார்கள் / கோரிக்கைகள் பெறப்பட்டதற்கான ஒப்புகை குறுஞ்செய்தியாக மனுதாரருக்கும், புகார் / கோரிக்கை குறித்த விவரம் அடங்கிய குறுஞ்செய்தி சம்பந்தப்பட்ட குறைதீர்க்கும் அலுவலருக்கும் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது. குறுஞ்செய்தியைப் பெற்ற

குறைதீர்க்கும் அலுவலர் (GRO) தொலைபேசி வழியாக சம்பந்தப்பட்ட மனுதாரரைத் தொடர்பு கொண்டு புகார்கள் / கோரிக்கைகள் குறித்த கூடுதல் விவரங்களைப் பெற்று நடவடிக்கை எடுப்பார். புகார்கள் / கோரிக்கைகள் குறித்த விவரம் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் www.ammacallcentre.tn.gov.in என்ற அம்மா அழைப்பு மைய இணையதளத்தில் குறை தீர்க்கும் அலுவலரால் பதிவேற்றப்படுகிறது. மேலும், புகார்கள் / கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்ட விவரம் மனுதாரருக்குக் குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது. 01.01.2018 முதல் 31.12.2018 வரை அம்மா அழைப்பு மையத்தில் 1,07,690 புகார்கள் / கோரிக்கைகள் பெறப்பட்டு அவற்றில் 96.65% புகார்கள் / கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் 2019ஆம் ஆண்டில் 30.04.2019 வரை 32,713 புகார்கள் / கோரிக்கைகள் பெறப்பட்டு அவற்றில் இதுவரை 64.45% புகார்கள் / கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

## 8.14. திறன் மேம்பாடு

ஜூன் 2007 முதல், தமிழக அரசுத் துறைகளின் பயிற்சிக்கான தேவைகளை அளிப்பதில் எல்காட் நிறுவனம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. எல்காட் – பெருங்குடி வளாகத்தில் 75 இருக்கைகளுடனும், மாவட்ட ஆட்சியரகங்களில் குறைந்தபட்சம் 15 இருக்கைகளுடனும் (மதுரை, திருச்சியில் 30 இருக்கைகள்) போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் பயிற்சி வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மின் ஆளுமைத் திட்டங்களில் இணைந்து பணிபுரியும் இடைநிலை அலுவலர்களுக்கானதாக இப்பயிற்சி வகுப்புகள் அமைகின்றன.


இப்பயிற்சியின் பொருளடக்கங்கள் தேவையான அறிவு மற்றும் திறனை வளர்க்கும் வகையிலும், அவர்கள் ஈடுபடும் திட்டங்களைப் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளன.

கணினி இயங்கு தளங்களான – விண்டோஸ், லினக்ஸ் (SUSE Linux / BOSS etc) ஆகியவற்றுக்கான விரிவான பயிற்சியும், குறித்த செயலி மென்பொருட்கள்

பயிற்சியும் "பயிற்சியாளரைப் பயிற்றுவித்தல்" வழியாக அளிக்கப் படுகிறது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

பயிற்சிக் கூட உட்கட்டமைப்பு வசதிகள், குறிப்பிட்ட சில செயலி மென்பொருட்களுக்கான பயிற்சிகளுக்காக வழங்கப்படுகின்றது.

தமிழக அரசுத் துறைகளிலிருந்து இதுவரை 1,19,247 பங்கேற்பாளர்கள் இந்தப் பயிற்சியால் பயனடைந்துள்ளனர்.



படம் – 30: அண்ணா மேலாண்மை நிறுவன அலுவலர்களுக்கான பயிற்சி, எல்காட் பயிற்சி மையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

## 8.15. வலையமைப்பு

### அ) காணொலிக் காட்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் மே 2016 முதல் ஜுன் 2019 வரை 197 பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்கான சேவைகளை எல்காட் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அதி முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் பொழுது தேவைப்படும் தகவல் தொடர்பு உபகரணங்களையும் அரசுத்துறைகள் முகமைகளுக்கான காணொலிக் காட்சி உபகரணங்களையும் எல்காட் நிறுவனம் வழங்கி வருகிறது.

### ஆ) உள் சுற்று தொலைக்காட்சிக் கண்காணிப்பு அமைப்பு

அரசுத் துறைகள் / முகமைகளுக்கான தேர்வுகளைக் கண்காணிப்பதற்கும் 24 x 7 மணி நேரமும் தலைமைச் செயலகத்திற்கு வருபவர்களைக் கண்காணிப்பதற்கும் ஏதுவாக அங்குள்ள முதன்மைக்

கட்டடம் மற்றும் நாமக்கல் கவிஞர் மாளிகையில் கண்காணிப்பு புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டு அதன் கட்டுப்பாட்டு அறை நாமக்கல் கவிஞர் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளது. பொதுத் தேர்தல்கள் துறைக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**இ) மின்னணு அறிவிப்புப் பலகை**

நீதிமன்ற வளாகங்களில் மின்னணு முறை அறிவிப்புப் பலகை மற்றும் படப்பிடிப்புத் தளம் ஆகியவை இணைந்து காணொலிக் காட்சி அமைப்பதற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

**ஈ) மின்னணு கடிகாரம் மற்றும் வலையமைப்புப் பராமரிப்பு**

தமிழக சட்டமன்றப் பேரவையிலுள்ள அனைத்து கடிகாரங்களின் கால அளவு ஒரே மாதிரி துல்லியமாக இருப்பதற்காக மின்னணு கடிகாரங்கள் வழங்கி பராமரிக்கப்படுகின்றன. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் உள்வலையமைப்பு மற்றும்

இணையதள வசதி ஏற்படுத்திக் கொடுத்து அதனை 24 x 7 மணி நேரமும் பராமரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 9. பரிசீலனையில் உள்ள செயற்குறிப்புகள்

### 9.1. மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை (Electronics Hardware Manufacturing Policy)

எல்காட் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள வரைவு மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 9.2 நில வங்கிகளை உருவாக்குதல்

தமிழ்நாட்டில் பல வன்பொருள்/ மென்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZs) உள்ளன. இதில் எல்காட் நிறுவனம் சுமார் 1321.61 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளடங்கிய நிறுவனங்களுக்கான 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவியுள்ளது. இவை, திருவாளர்கள் சி.டி.எஸ், ஃபோர்டு, விப்ரோ, ஹெச்.சி.எல், டெக் மஹிந்த்ரா,

ஹனிவெல், சின்டெல் போன்ற பெரிய நிறுவனங்களை ஈர்த்தது. எல்காட் நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் உள்ள வன்பொருள் தொழிற்சாலைகளுக்கு நில ஒதுக்கீடு செய்யவும் மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்தியை ஊக்குவிக்கவும் மாநிலத்தில் ஒரு நில வங்கியை உருவாக்க உள்ளது.

**9.3. நிதி தொழில்நுட்பக் (FinTech) கொள்கை**

தமிழகத்தை நிதி தொழில்நுட்பத்தில் ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்கு, எல்காட் நிறுவனம் ஒரு வரைவு நிதி தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கி வருகிறது.

**10. நிதி செயல்பாடு:**

எல்காட் நிறுவனம் ஆரம்பத்தில் நான்கு தொழில் பிரிவுகளுடனும் குறைந்தபட்ச ஆதாரங்களுடனும் செயல்பட்டு தனது செலவுகளை ஈடுகட்டும் அளவில் மட்டுமே வருவாய் ஈட்டி வந்தது. 1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து 2002-03 வரை பங்கு மூலதனம்

ரூ.25.93 கோடிக்கு எதிராக இருப்பு மற்றும் உபரித் தொகையாக ரூ.1 கோடி என்ற நிலையில் மட்டுமே எல்காட் நிறுவனம் சேர்த்திருந்தது.

தற்போது எல்காட் நிறுவனம் 2017-18 ஆம் ஆண்டின் முடிவில் இருப்பு மற்றும் உபரித் தொகையாக ரூ.266.49 கோடி வைத்துள்ளது.

இவ்வாறு, எல்காட் நிறுவனம் தற்போது வளமான நிதி நிலையை அடைந்துள்ளதுடன், தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் மீதமுள்ள நிலங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலமும் மற்றும் காத்திருப்பில் உள்ள புதிய வணிக வழிகளைச் செயல்படுத்துவதன் மூலமாகவும் எதிர்வரும் காலங்களில் எல்காட் நிறுவனத்தின் நிதி நிலை தொடர்ந்து உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2013-14 முதல் 2017-18 வரை மற்றும் 2018-19 (தணிக்கை செய்யப்படாதது) ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் நிதிச் செயல்பாடு பின்வருமாறு:

**(ரூபாய் இலட்சங்களில்)**

| விவரங்கள் | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 (தணிக்கை செய்யப்படாதது) |
|---|---|---|---|---|---|---|
| **வரவினம்** | | | | | | |
| விற்பனை | 853.17 | 891.51 | 930.82 | 863.16 | 985.48 | 772.38 |
| சேவைகள் | 907.22 | 1,432.75 | 842.52 | 549.71 | 1,332.19 | 1,009.99 |
| இ த ரவருவாய் | 3,400.54 | 4,155.64 | 10,157.63 | 5,858.25 | 6,525.93 | 10,798.92 |
| **மொத்த வரவினம்** | **5,160.93** | **6,479.90** | **11,930.97** | **7,271.12** | **8,843.60** | **12,581.29** |
| **செலவினம்** | | | | | | |
| நிர்வாகம் | 1,508.90 | 1,686.75 | 1,712.48 | 1,674.59 | 2,078.32 | 2,524.02 |
| தேய்மானம் | 326.68 | 409.92 | 552.27 | 553.30 | 567.31 | 542.58 |
| நிதிச் செலவு (அரசு முன்பணங்கள் மீதான வட்டி) | 1,111.16 | 1,134.52 | 1,034.55 | 953.44 | 756.36 | 1,230.07 |
| இ த ரசெலவினம் | 550.28 | 625.65 | 1,107.69 | 1,114.44 | 1,956.68 | 1,204.00 |
| **மொத்த செலவினம்** | **3,497.02** | **3,856.84** | **4,406.99** | **4, 295.77** | **5,358.67** | **5,500.67** |
| **நிகர வருவாய்** | **1,663.91** | **2,623.06** | **7,523.98** | **2,975.35** | **3,484.93** | **7,080.62** |
| **வருமான வரி** | **468.79** | **701.72** | **1,616.49** | **923.66** | **1,082.99** | *** 1,292.00** |
| **அரசுக்குச் செலுத்திய தொகைகள்** | | | | | | |
| வட்டி/ நியமனக் கட்டணம் | 1,109.29 | 1,132.65 | 1,032.69 | 951.58 | 754.50 | ** - |
| பங்காதாயம் | 777.92 | 777.92 | 1,772.24 | 777.92 | 777.92 | ** - |
| **அரசுக்குச் செலுத்திய மொத்தத் தொகைகள்** | **1,887.21** | **1,910.57** | **2,804.93** | **1729.50** | **1,532.42** | - |

<u>குறிப்பு</u>:

* 2018-19 ஆம் ஆண்டிற்கான வருமான வரி, அவ்வாண்டிற்கு செலுத்தப்பட்ட முன்கூட்டிய வரியைக் குறிக்கிறது.

** 2018-19 ஆம் ஆண்டிற்கான பங்காதாயம் மற்றும் அரசு முன்பணங்கள் மீதான வட்டித்தொகை ஆண்டு பொதுக் கூட்டத்திற்குப் பின் செலுத்தப்படும்.

## அத்தியாயம் - 3

# மின்னாளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை

## 1. முன்னுரை

தமிழக அரசின் அனைத்து மின்னாளுமை முயற்சிகளையும் தலைமையேற்று செயல்படுத்திட, மின்னாளுமை ஆணையரகம் 2006-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தேசிய மின்னாளுமைத் திட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975–இன்கீழ் தன்னாட்சி சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது.

## 2. தொலைநோக்குப் பார்வை

நல்லாளுமையை நிறைவு செய்யும்பொருட்டு, தகவல் தொழில்நுட்பக் கருவிகளின் வாயிலாக, அரசாங்கத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, திறன்களை மேம்படுத்துதல் மற்றும் மக்களுக்குச் இணக்கமான வகையில் வெளிப்படைத்தன்மையுடன் திறன் மிகுந்த சேவைகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

## 3. குறிக்கோள்

தகவல் தொழில்நுட்பத்தின் கருவிகளைப் பயன்படுத்தி, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, குறைந்த செலவிலும், அளவிடக்கூடிய நிர்வாகத் தீர்வுகளை வழங்குவதும் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான நம்பிக்கை இணையம் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), / இயந்திர கற்றல்(Machine Learning) பொருட்களின் இணையம் (IoT), ஆளில்லா குறுவிமானங்கள் (Drones), தரவுப்பகுப்பாய்வு (Data Analytics), மிகைநிகர்உண்மை / மெய்நிகர் உண்மை (Augmented Reality/Virtual Reality) ஆகியவற்றை முழுமையாக பயன்படுத்தி அரசின் சேவைகளைத் திறம்பட வழங்குவதே தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் குறிக்கோளாகும்.

4. **நோக்கங்கள்**

i) தமிழக அரசின் தொழில்நுட்ப மற்றும் புதுமையான அணுகுமுறைகளை உருவாக்கும் முதன்மையான அமைப்பாக விளங்குதல்,

ii) தமிழ்நாட்டின் ஒவ்வொரு அரசு நிறுவனத்தினையும் காகிதப் பயன்பாடற்ற, இடையூறுகளற்ற, வெளிப்படைத்தன்மையுடன் மற்றும் நேரடி தொடர்புகளற்ற நிறுவனங்களாக மாற்றுதல்.

iii) அரசின் சேவைகளை விரைவாக வழங்குவதன் மூலம் அச்சேவைகளைப் பெறும் பங்குதாரர்களுக்கு அதன் எளிமைத் தன்மையை உணரச்செய்தல்.

iv) மாநிலத்தில் மென் உட்கட்டமைப்பினை ஏற்படுத்தி,மாநில பொருளாதாரத்தின் போட்டித் தன்மையை மேம்படுத்தி, மாநிலத்தை எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப தயார்படுத்தும் ஊக்குவிப்பானாக செயல்படுதல்

v) அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவு செய்வதில் ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் உதவுதல்.

vi) பல்வேறு அரசுத் துறைகளின் பொதுவான சேவைகளின் தேவையை கண்டறிந்து, குறைந்த செலவில் தரமான தீர்வுகளை வழங்குதல்,

vii) தமிழ்நாடு மின்னாளுமை முகமையினைப் போன்ற ஒத்த நோக்கமுடைய அரசுத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), சர்வதேச அமைப்புகள் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைந்து, பகிர்ந்து கொள்ளத்தக்க வகையிலான ஆளுமையை உருவாக்குதல்.

viii) ஆளுமை தொடர்பான சிக்கல்களுக்கு புதுமையான மற்றும் செயல்படுத்தக்கூடிய தீர்வுகளை அளித்திடும் வகையில், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தொடக்கநிலை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் திறமையான தனிநபர்களை கொண்ட ஒரு துடிப்பான சூழலை உருவாக்குதல்.


ix) நிர்வாகத்தில் செயல்திறனை மேம்படுத்த, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தகவல் தொழில்நுட்பத்தில் அனைத்து நிலைகளிலும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல்.

x) மின்னாளுமை குறித்த பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் நடத்துதல்.


xi) தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பயிலரங்க நடவடிக்கைகள், செய்திமடல்கள் போன்றவற்றை வெளியிடுதல்.

## 5. நிறுவனக் கட்டமைப்பு

### 5.1. மின்னாளுமை ஆணையரகம்



## 5.2. தமிழ்நாடு மின்னாளுமை முகமை




## 5.3. வளர்ந்துவரும் தொழில் நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்பு மையம் (CEET) Centre of Excellence for Emerging Technology

கடந்த 2019-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு அளித்த பதிலுரையில் வளர்ந்துவரும் தொழில் நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்புமையம் (CEET) தமிழ்நாடு மின்னாளுமை முகமையில் உருவாக்கப்படும் என அறிவித்தார்கள்.

இச்சிறப்பு மையமானது அரசுத் துறைகளில் மென்பொருள் உருவாக்கம் மற்றும் உயர்தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவற்றிற்கிடையே ஏற்படும் அறிவு இடைவெளியை சமன்செய்யும் ஒரு பாலமாக நிறுவப்படும்.

தெரிந்தெடுக்கப்பட்ட அரசுத் துறைகளின் புதுமையான முயற்சிகளுக்கு உதவும் ஒரு வினையூக்கியாக (Catalyst) விளங்குகிறது. இந்த மையம் தொழில்நுட்பவியல் துறையில் உள்ள பிற பங்குதார்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு தளமாக விளங்குகிறது. இதுமட்டுமல்லாமல் இந்த மையம் தொழிற்துறை, அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் தேவைகளை இணைக்கும் பாலமாக விளங்குகிறது. மேலும் இந்த மையம் மூலமாக

- அரசு துறைகள், முகமைகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைப்புகள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன்

செயல்படும் கல்வி நிறுவனங்களுடன் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுதல்.

- சர்வதேச அளவில் வளர்ந்துவரும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள சிறந்த யுக்திகளையும் செயல்பாடுகளையும், தரப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்.
- பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள அலுவலர்களின் திறன் வளர்த்தல் மற்றும் அவர்களின் தனித்த நோக்கங்கள் நிறைவடைய வசதிகளை ஏற்படுத்துதல்.
- இதுபோன்ற உயர் தொழில்நுட்பம் மற்றும் அதற்கும் மேலான வசதிகளை அளிக்கும் பிற நிறுவனங்களையும் தொடர்பு கொள்ளுதல்.
- வளர்ச்சித்திட்டங்கள், பயிற்சிகள், மாநாடுகள், கருத்தரங்குகள், சிறப்பு விரிவுரைகள் மற்றும் இதர நிகழ்வுகளை நடத்துதல்.
- புதுமையான யுக்திகளையுடைய திறமையாளர்களைக் கொண்டு வளர்ந்துவரும் தொழில்நுட்பம் சார்ந்த கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் புதிய கருத்துகளை பெறுதல் மற்றும் புதுமையான திறமைகளை வளர்த்தல்.

- ஆராய்ச்சி முடிவுகளை கட்டுரைகளாகவும், புத்தகங்களாகவும், பத்திரிக்கைகளாகவும் மற்றும் இதர ஆவண வடிவில் வழங்குதல்.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகள் செய்வதற்குத் தேவையான முன்மாதிரிகளைக் கொண்டு பல்வேறு புதுவித அம்சங்களுடன் உயிர்ப்பான கட்டமைப்புகளுடனும் ஒரு முன் மாதிரியாக செயல்படுதல் .
- மறுபயன்பாட்டிற்குத் தேவையான கோட்பாடுகளை உருவாக்குதல், பிறத் துறைகளுக்கான சொத்துகளின் பயன்பாட்டை மையப்படுத்துதல் மற்றும் பகிர்ந்து கொள்ளுதல்.

**CEET மூலம் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-**

- CT scans வழியாக உள் இரத்தக் கசிவினைக் கண்டறிதல்
- செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி பயிர்களை தாக்கும் பூச்சிகளை அடையாளம் காணுதல், நோய் மற்றும் பயிரின் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவற்றைக் கண்டறிதல்.

- கணினி நோக்கு (Computer Vision) அடிப்படையிலான வருகைப் பதிவு முறை
- நம்பிக்கை இணையத்தை பயன்படுத்துதல் .
- நம்பிக்கை இணையம் மூலம் பதிவு ஆவணங்களைத் திருத்தம் செய்வதிலிருந்து தடுத்துப் பாதுகாத்தல்.
- மாநிலத் திட்டக் குழுவின் (SPC) நிலையான வளர்ச்சி இலக்குகளைக் (SDG) கண்காணித்தல்.
- மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்ப தரவுத் தளம் (State Family Database) உருவாக்குதல்.
- IoT மூலம் கிராமப்புறங்களில் குடிநீர் விநியோகத்தைக் கண்காணித்தல்.
- அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் இயந்திரப் பேசி (Chatbot) உருவாக்குதல்
- முதுமலை புலிகள் காப்பகத்திற்கான நிகழ்நேரக் கண்காணிப்புத் தீர்வு.






படம் – 31 &32 : **மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் புதிய அலுவலக**த்தை துவக்கி வைத்தார்.

### 5.4. மாநில மின் குறிக்கோள் குழு (State e-Mission Team)

மாநில மின் குறிக்கோள் குழு (SeMT), மாநில அரசுகளின் மின்னாளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசின் தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் (NeGP) கீழ், திறன் மேம்பாட்டு முயற்சியின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. மாநில மின் குறிக்கோள் குழுவானது மத்திய அரசின் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சகம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. SeMT ஆனது திட்ட மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் மாற்று மேலாண்மை ஆகிய பிரிவுகளின் ஆலோசகர்களைக் கொண்ட ஒரு முக்கிய அமைப்பாகும்.

### 5.5. மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (DeGS)

மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (DeGS) அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் இயங்கி வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரை, சென்னைப்பெருநகர மாநகராட்சி

ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட அளவிலான இச்சங்கங்கள் அனைத்து மின்னாளுமை தொடர்பான வழிகாட்டுதல்களை, தான் சார்ந்த மாவட்டத்திற்கு வழங்கி வருகிறது.

**6. தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு**

ஒருங்கிணைந்த மற்றும் பாதுகாப்பான தகவல் தொழில்நுட்பச் சூழலில் மின்னாளுமைத் திட்டங்களை வழிகாட்டி, தரப்படுத்திச் செயல்படுத்துதல் இன்றியமையாததாகும். அவ்வாறே, உதவிக் கணினிப்பகுப்பாய்வாளர் / உதவிக் கணினிப் பொறியாளர், கணினிப்பகுப்பாய்வாளர் / கணினிப் பொறியாளர், முதுநிலை கணினிப்பகுப்பாய்வாளர் / முதுநிலை கணினிப் பொறியாளர் போன்ற பதவிகளில் 98 பணியிடங்களைக் கொண்ட தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு (IT Cadre) உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசுத் துறைகளின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை பூர்த்தி செய்ய, உதவிக் கணினிப் பகுப்பாய்வாளர் / உதவிக்

கணினிப் பொறியாளர், பணியிடங்கள் அந்தந்தத் துறைகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

## 7. தமிழ் நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்), விதிகள், 2016

அரசுத் துறைகள் பொதுமக்களுக்கான சேவைகள் வழங்குதலை மின்னணு முறையில் மாற்றிடவும், அச்சேவைகளின் தரவுகள் சேகரிப்பு, உருவாக்கம் மற்றும் வழங்கல் முறைகளைப் பரிந்துரைத்திடும் வகையிலானதொரு மின்னணு சேவை விநியோகக் கட்டமைப்பினை உருவாக்கிடவும், தகவல் தொழில்நுட்பவியல் சட்டம், 2000 (21 மத்திய சட்டம் 2000) பிரிவுகள் 6 மற்றும் 6ஏ-ன் கீழ் "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்) விதிகள், 2016" எனும் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. (https://tnega.tn.gov.in/pages/view/Electronic-Services-Delivery-Rules-2016). இவ்விதிகள் அரசு ஆணை நிலை எண்.13, தகவல் தொழில்நுட்பவியல் (மி.ஆ.1) துறை, நாள்

02.12.2016 அன்று வெளியிடப்பட்டு, தமிழக அரசின் அரசிதழிலும் அறிக்கையாக வெளியிடப்பட்டது.

## 8. தமிழ்நாடு மின்னாளுமை முகமையில் (TNeGA) மின்னாளுமை மற்றும் பிற முயற்சிகள்

### 8.1. மின்-வலைதளம்

அரசுடன் பொதுமக்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வகையில் பின்வரும் வலைத்தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(i) https:// tn.gov.in/

(ii) https://tnega.tn.gov.in

(iii) https://tnedistrict.tn.gov.in/

(iv) https://www.tnesevai.tn.gov.in/

(v) https://tngis.tn.gov.in/

### 8.2. மின்- உள்கட்டமைப்பு

மின்னணு இணையவழி சேவைகளைத் தங்குதடையின்றி வழங்குவதற்குத் தேவையான வன்பொருள் மற்றும் இணைய தொழில்நுட்பத்தை தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) கொண்டுள்ளது.

**8.3. மின்- கொள்முதல்**

தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்குத் தேவைப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோருவது மற்றும் ஏற்பது ஆகியவை தமிழக அரசின் மின்-கொள்முதல், இணையதளம் (https://tntenders.gov.in) வாயிலாக நடைபெறுகிறது.

**8.4. மின்-வருகைப் பதிவேடு**

பணியாளர்களின் வருகை குறித்தப் பதிவுகளுக்கு செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) அடிப்படையிலான முகமறியும் (Facial Recognition) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**8.5. மின்-களஞ்சியம் (e-Repository)**

மின்-களஞ்சியம் என்பது ஒரு மையப்படுத்தப்பட்ட மென்பொருள் களஞ்சியமாக, அரசுத் துறைகளினால் பயன்படுத்தப்படும்.

**8.6. மின்-கண்காணிப்பு (e-Monitoring)**

மின்-கண்காணிப்பு மென்பொருள் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் நிலையை மதிப்பாய்வு செய்ய மற்றும் கண்காணிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

**9. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

தொடர்ச்சியான புதிய தொழில்நுட்பத் திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு மின்னாளுமை முகமை பல்வேறு சிறந்த கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்விசாரா நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. பின்வரும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

i) தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) மற்றும் இந்திய மேலாண்மை நிறுவனம், (IIM) திருச்சிராப்பள்ளி ஆகியவற்றிற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

ii) தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) மற்றும் வர்ஜீனியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (Virginia Tech University) ஆகியவற்றிற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

iii) தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) மற்றும் பாண்டாக்– யு.கே (Pontaq UK)-வின் இந்தியா புதுமை நிதியம் ஆகியவற்றிற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

மேம்பட்ட தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி பல்வேறு துறைகளின் சிக்கல்களை தீர்க்க, தமிழ்நாடு மின்னாளுமை முகமை வாயிலாக உதவுவதற்கு திருச்சிராப்பள்ளியில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனம் உதவிகள் புரியும்.

https://tnega.tn.gov.in/pages /view/MOU-IIMT

அமெரிக்காவின் வர்ஜீனியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகமானது, தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் வேளாண்மை குறித்த ஆராய்ச்சிகளில்

விவசாயத் தீர்வுகள் மற்றும் ஆளில்லா குறுவிமானங்கள் குறித்த ஆராய்ச்சிகளை ஆதரிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

https://tnega.tn.gov.in/pages /view/MOU-VT

பாண்டாக் இங்கிலாந்தின் இந்தியா புதுமை நிதியமானது, TNeGA-யினால் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பிற அரசுத் துறைகளுக்கான தீர்வுகளைத் தயாரிப்பதில் உறுதியளிக்கும் துவக்க நிலை நிறுவனங்களுக்கு உதவும்.

https://tnega.tn.gov.in/pages /view/MOU-Pontaq

**10. மின்– ஊடகம் (நமது அரசு)**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் “நமது அரசு” திட்டம் 2017-18 சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது.

ஆளுமை குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு கொண்டு சேர்ப்பதை “நமது அரசு” நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும்

நல் ஆளுமையில் பங்குபெறுவதற்கும், குடிமக்களுக்கான தளமானது மக்களுக்கு அதிகாரமளிக்கிறது. இதனைச் செயல்படுத்துவதற்கென அரசு ரூ.91.80 இலட்சம் நிர்வாக ஒப்பளிப்பும், முதற்கட்டமாக அரசுரூ.47.95 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் வழங்கியுள்ளது.

## 11. வாராந்திரக் கருத்தரங்குகள்

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையம் (CEET) மூலமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து கருத்தரங்குங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கீழ்க்காணும் கருத்தரங்குகள் இதுவரை நடத்தப்பட்டுள்ளன.

1) ஆழ் கற்றலைப் பயன்படுத்தி முகமறிதல்.
2) மறைமுக மார்க்கோவ் மாடல்களைப் பயன்படுத்தி உழவர்களின் துயர்துடைப்பது குறித்த ஒரு அறிமுகம்.
3) தரவு சுரங்கத்திற்கான சிறந்த 10 வழிமுறைகள்.

4) பரவலாக்கப்பட்ட பேரேடுகள் மற்றும் ஒருமித்த வழிமுறைகள்.

5) திட்டமிடுவதில் ஏற்படும் சிக்கல்களுக்கான வரைபடத் தத்துவார்த்த வழிமுறைகள்.

6) பன்முக பகுப்பாய்வு மற்றும் பயன்பாடுகள்.

7) தானியங்கி வாகன பதிவு எண் அங்கீகாரம் அறிதல்.

8) தொடர்வண்டிகளை, அதனதன் பாதைகளில் சரியாக அனுப்புவதற்கான " நிகழ்நேர திட்டமிடல் அல்காரிதம் "

9) அடிப்படை படச்செயலாக்க நுட்பங்கள் (Basic Image Processing).

10) Java-வை பயன்படுத்தி XML வடிவமைப்பினை கையாளுதல்.

11) நடத்தை பொருளாதாரத்தில் (Behavioural Economics) உள்ள இடையூறுகளை முழுமையாக களைதல்.

12) பெரிய அளவிலான தகவல் தொழில்நுட்பத் திட்டங்களை செயல்படுத்துதல்

## 12. நடவடிக்கைகள்

### 12.1. அரசு இ – சேவை மையங்கள்

இணைய வழியில் அரசு இ-சேவை மையங்களின் மூலமாக, தொலைதூர கிராமத்திலிருக்கும் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே அனைத்து சேவைகளையும் வழங்க வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேறியுள்ளது. மாநிலத்தின் வெவ்வேறு அரசுத் துறைகளின் மின் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில், ஒரு பொதுவான இடத்தில் வழங்கும் நோக்கில் அரசு இ-சேவை மையங்கள் செயல்படுகின்றன.

தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் (PACCS), புது வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமப்புற வறுமை ஒழிப்பு சங்கங்கள் (VPRC), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் – பிரான்சிஸ் (TACTV Franchise), வேளாண்மை அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நிறுவனம் (IFAD) மற்றும் கிராமப்புறத் தொழில்முனைவோர் (VLE) ஆகியவற்றின் மூலம் அரசு இ-சேவை மையங்கள் நடத்தப்படுகின்றன. மொத்தத்தில் மாநில முழுவதும் 12,649 அரசு இ-சேவை

மையங்களை, 13088 செயலிடை முகப்புகளுடன் தமிழகம் முழுவதும் நிறுவியுள்ளது .

| சுருக்கம் | | | |
|---|---|---|---|
| வ. எண் | இ-சேவை மையத்தின் பெயர் | மையங்களின் எண்ணிக்கை | செயலிடை முகப்புகளின் எண்ணிக்கை |
| 1. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் | 661 | 1002 |
| 2. | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 4369 | 4372 |
| 3. | கிராமப்புற வறுமை ஒழிப்புச் சங்கங்கள் | 4269 | 4364 |
| 4. | ஐபாட்(IFAD) | 8 | 8 |
| 5. | கிராமப்புற தொழில் முனைவோர் சங்கங்கள் | 2304 | 2304 |
| 6. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் உரிமம் பெற்ற தனியார் மையங்கள் | 1001 | 1001 |
| 7. | மீன்வளத்துறை | 37 | 37 |
| | மொத்தம் | 12649 | 13088 |

## அரசு இ – சேவை மையங்கள்மூலம் வழங்கப்படும் சேவைகள்

| துறைகள் | வழங்கப்படும் சேவைகளின் பெயர் |
|---|---|
| வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –34) | வருமானச் சான்றிதழ் |
| | பிறப்பிடச் சான்றிதழ் |
| | இருப்பிடச் சான்றிதழ் |
| | சாதி சான்றிதழ் |
| | குடும்பத்தில் முதல்பட்டதாரிச் சான்றிதழ் |
| | கணவனால் கைவிடப்பட்டவர் என்ற சான்றிதழ் |
| | குடும்ப இடப்பெயர்வுச் சான்றிதழ் |
| | வேலையில்லாச் சான்றிதழ் |
| | விதவைச் சான்றிதழ் |
| | விவசாய வருமானச் சான்றிதழ் |
| | கல்வி ஆவணங்கள்பேரிடரின்போது தொலைந்தமைக்கான சான்றிதழ் |

| | |
|---|---|
| | ஆண் வாரிசு இன்மைச் சான்றிதழ் |
| | திருமணம் ஆகவில்லை என்பதற்கான சான்றிதழ் |
| | கலப்புத் திருமணச் சான்றிதழ் |
| | வாரிசு சான்றிதழ் |
| | சொத்து மதிப்புச் சான்றிதழ் |
| | அடகு பிடிப்போர் உரிமம் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குதல் |
| | வட்டிக்குப் பணம் கொடுப்போர் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குதல் |
| | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் |
| | சிறு / குறு விவசாயி சான்றிதழ் |
| | மின்-அடங்கல் |
| | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம். |
| | இந்திரா காந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் |
| | இந்திரா காந்தி மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் |

| | |
|---|---|
| | மாற்றுதிறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் |
| | ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்டபெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| | திருமணமாகாத பெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் |
| | தமிழ் நிலம் - முழுநிலப் பட்டா மாறுதல் |
| | தமிழ் நிலம் –கூட்டுப் பட்டா மாறுதல் |
| | தமிழ் நிலம் - உட்பிரிவு |
| | குறைதீர் நாள் மனு |
| | தமிழ் நிலம் – 'அ' பதிவேடு விவரம் |
| | தமிழ் நிலம் - சிட்டா விவரம் |
| **சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 7)** | அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் |
| | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் I |

| | |
|---|---|
| | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் II |
| | டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் |
| | டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் |
| | ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம் |
| | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் |
| **உணவுப் பொருள் வழங்குதல் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -6)** | புதிய அட்டைக்கு விண்ணப்பித்தல் |
| | அட்டை மாற்றல் (புதிய குடும்ப உறுப்பினர்களைச் சேர்த்தல், முகவரி மாற்றம், கார்டு வகை மாற்றம், சிலிண்டர் மாற்றம், குடும்பத் தலைவர் உறுப்பினர் மாற்றம், பயனாளியின் புகைப்படம் மாற்றம்) |

| | |
|---|---|
| | குடும்ப அட்டை ஒப்படைத்தல் / ரத்து செய்தல் |
| | புதிய பயனர் பதிவு செய்தல் |
| | குடும்ப அட்டையினை முடக்குதல் / விடுவித்தல் |
| | மின்னணு அட்டை அச்சிடுதல் |
| **காவல் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 8)** | சமூக சேவை பதிவேடு நிலை |
| | முதல் தகவல் அறிக்கை நிலை |
| | இணையவழி புகார் பதிவு செய்தல் |
| | புகார் நிலை அறிதல் |
| | வாகன விவரம் அறிதல் |
| | முதல் தகவல் அறிக்கை பார்வையிடுதல் |
| | சாலை விபத்து வழக்குகளில் ஆவணங்களை பதிவிறக்கம் செய்தல் |
| | தொலைந்த ஆவணங்களின் அறிக்கை |

| | |
|---|---|
| **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளிமேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம். |
| | பழங்குடியின மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம். |
| | பள்ளி மேற்படிப்பிற்கான மாநிலஅரசின் சிறப்புக் கல்வி உதவித் திட்டம். |
| | மேற்படிப்பிற்கான சிறப்பு கல்வி உதவித் திட்டம். |
| **பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித் திட்டங்கள். |
| | தொழிற்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவி |
| | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பட்டப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |

| | |
|---|---|
| | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பட்டயப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |
| **தமிழ்நாடு வக்ஃப் வாரியம்** | உலமா ஓய்வூதிய திட்டம் |
| **சுகாதாரத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | மகப்பேறு முன்பதிவு |
| **கொதிகலன் இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் பதிவு செய்தல் |
| | கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் புதுப்பித்தல் |
| | உற்பத்தி மற்றும் புதுப்பிப்பு அனுமதி கோரி விண்ணப்பித்தல் |
| | கட்டடம் புதுப்பிப்பு அனுமதி கோரி விண்ணப்பித்தல் |
| **நகராட்சி நிர்வாக ஆணையரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)** | வரி இல்லா இதர கட்டணங்கள் |
| | தொழில் வரி வசூலித்தல் |
| | சொத்து வரி வசூலித்தல் |
| | பாதாள வடிகால் வரி வசூலித்தல் |
| | குடிநீர் வரி வசூலித்தல் |

| | |
|---|---|
| **சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | நீர் மற்றும் கழிவுநீர் வரி |
| **சென்னை மாநகராட்சி (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -6)** | பிறப்புச் சான்றிதழ் அச்சிடுதல் |
| | இறப்புச் சான்றிதழ் அச்சிடுதல் |
| | வர்த்தக உரிமம் புதுப்பித்தல் |
| | நிறுவன வரி வசூலித்தல் |
| | தொழில் வரி வசூலித்தல் |
| | சொத்து வரி வசூலித்தல் |
| **தீயணைப்பு மற்றும் மீட்பு இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)** | பலமாடிக் கட்டடத்திற்கான தடையின்மை இணக்கச் சான்றிதழ் |
| | பலமாடிக் கட்டடம்கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ் |
| | பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ் |

| | |
|---|---|
| | பலமாடிக் கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| | பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடம் கட்டுவதற்கான தீ உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| **தமிழ்நாடு மின்சார வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -3)** | மின் கட்டணம்செலுத்துதல் |
| | புதிய குறைந்த மின் அழுத்தம் இணைப்பு பதிவுசெய்தல் |
| | புதிய குறைந்த மின் அழுத்தம் இணைப்புக்கான கட்டணம் செலுத்துதல் |
| **அண்ணா பல்கலைக்கழகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | தமிழ்நாடு பொறியியல் கல்விக்கான சேர்க்கை நிகழ்நிலை பதிவு |
| **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)** | பதிவு அடையாள அட்டை அச்சிடுதல் |
| | சுயவிவரப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| | சுய விவரம் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பம் |
| | பதிவு செய்ய விண்ணப்பித்தல் |

| | |
|---|---|
| | அலோபதி மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் / புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் |
| | ஓமியோபதி மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் / புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் |
| **மருந்துக் கட்டுப்பாட்டு நிர்வாக இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)** | அட்டவணைப்படுத்தப்பட்ட X- மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் (அலோபதி) |
| | மருந்துகளை வழங்குவதற்கான உரிமம் / புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் (அட்டவணை x-ல் குறிப்பிட்ட மருந்துகள்) |
| | உரிமம் நகல் பெறுவதற்கான விண்ணப்பம் |
| **தமிழ்நாடு மின்னாளுமை முகமை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)** | பொது விநியோகத் திட்டத்திற்கான ஆதார் ஒருங்கிணைப்பு |


| | |
|---|---|
| **தமிழ்நாடு அரசு மின்ஆய்வுத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -2)** | ஒப்புதல் சான்றிதழ் |
| | பாதுகாப்புச் சான்றிதழ் வழங்குதல் |
| **சென்னை மாநகராட்சி போக்குவரத்துதுறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 1)** | சென்னை மாநகராட்சி போக்குவரத்துக் காவல் ரசீது செலுத்துதல். |
| **மீன்வளத்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 2)** | மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல் |
| | மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல் |
| **மாநில மாற்றுத்திறனாளிகள் நலத்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 3)** | கடன் உதவி திட்டம் விண்ணப்பம் |
| | திருமண உதவித் திட்டம் |
| | மாற்றுத்திறனாளிகள் பராமரிப்புப் படி |
| **கைத்தறி இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 6)** | டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர்கள் நல அறக்கட்டளையின் கீழ் உதவித்தொகை வழங்குதல் |

| | |
|---|---|
| | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் |
| | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதிய திட்டம் |
| | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதிய திட்டம் |
| | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா |
| | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா கீழ் சர்வசிக்க்ஷா யோஜனா திட்டம் விண்ணப்பித்தல். |
| **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 1)** | தமிழ்நாடு அரசு நில உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒழுங்குமுறை சட்டம் |
| **மொத்தம்** | **115** |


## 2018-19 ஆம் நிதியாண்டில் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக வழங்கப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான வரைபடங்கள்:




படம் – 33




படம் – 34




**படம் – 35**

| நிதி ஆண்டு | அரசு இ-சேவை மையம் மூலமாக வழங்கப்படும் பரிவர்த்தனை களின் எண்ணிக்கை (இலட்சங்களில்) | திறந்தவெளி இணையதளம் மூலமாக வழங்கப்படும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை (இலட்சங்களில்) | மொத்த பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை (இலட்சங்களில்) |
|---|---:|---:|---:|
| 2011-12 | 0.83 | 0 | 0.83 |
| 2012-13 | 1.98 | 0 | 1.98 |
| 2013-14 | 9.85 | 0 | 9.85 |
| 2014-15 | 24.75 | 0 | 24.75 |
| 2015-16 | 110.10 | 0 | 110.10 |
| 2016-17 | 116.33 | 0 | 116.33 |
| 2017-18 | 117.34 | 0 | 117.34 |
| 2018-19 | 100.75 | 3.24 | 103.99 |
| **மொத்தம்** | **481.93** | **3.24** | **485.17** |

### 12.2. நிரந்தரப் பதிவு மையங்கள்(PECs)

ஆதார் பதிவுக்கான பதிவாளராக மின்னாளுமை இயக்குநரகம் (DeG) / தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) ஆகியவை நியமிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட் (TACTV) மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) ஆகியவை தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் கீழ் பதிவு முகவர்களாகச் செயல்பட இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (UIDAI) தமிழ்நாட்டில் நிரந்தரப் பதிவு மையங்களாக (PECs) நியமிக்கப்பட்டுள்ளனர். நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs) ஆதார் சேர்க்கைக்காக தமிழ்நாடு முழுவதும் மாவட்ட ஆட்சியரகங்கள், மாநகராட்சித் தலைமையகங்கள், நகராட்சி மண்டல அலுவலகங்கள் மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ளன. கட்டாயம் உயிர்சார் (Bio-metric) புதுப்பிப்பு 3.10.2016 முதல் இணைய இணைப்பு இல்லாத நிலையிலும் இணைய இணைப்புடன் கூடிய மாநில மக்கள் தொகைப்பதிவு மென்பொருள் மூலமாக 07.11.2016 முதல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சேவைகள் இலவசமாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**2018-19 நிதியாண்டிற்கான ஆதார் பதிவு மற்றும் ஆதார் உருவாக்கப்பட்ட விவரங்கள்:-**

| பதிவு முகமைகள் | மொத்தப் பதிவுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | UIDAI தரவின் மூலம் ஆதார் எண் உருவாக்கப்பட்ட எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| தமிழ்நாடு அரசு கேபிள் டிவி (TACTV) | 7.21 | 3.56 |
| தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) | 7.89 | 3.68 |
| **மொத்தம்** | **15.10** | **7.24** |

## 12. 3. மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம் (State Family Data base)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஜனவரி 2019-இல் மேதகு தமிழக ஆளுநர் அவர்களின்

உரையின் மீதான பதிலுரையின் போது மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம் (SFDB) உருவாக்கப்படும் என பதிலளித்து அறிவித்தார்.

மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம் (SFDB) தமிழ்நாட்டில் குடியிருப்போரின் தரவுகளின் ஒற்றை ஆதாரமாக விளங்கும். பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்கான பயனாளிகளைத் தங்குதடையின்றித் துல்லியமாக அறிந்திட உதவும் SFDB மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பான முறையில் மின்னணுமயமாக்கப்பட்ட தரவுதளமாக விளங்கும்.

### 12.4. உங்கள் அரசை அறிந்து கொள்ளுங்கள் (KYG)

பொதுமக்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்குத் தமிழக அரசு வழங்கும் தகவல் மற்றும் சேவைகளுக்கான ஒற்றைச் சாளரமாக KYG விளங்கும். இது ஒரு செயற்கை நுண்ணறிவு மற்றும் கைப்பேசி செயலி (MobileApp) அடிப்படையிலான சேவையாக இருக்கும்.

## 12.5. உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம் (Tiny Uniform Resource Locator - Tiny URL)

அரசுத் துறைகள் பொதுமக்களுக்கு வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை அவர்கள் எந்நேரமும் எங்கும் பதிவிறக்கம் செய்திடும் வகையில் குறுஞ்செய்தி மூலம் அளித்திட TinyURL உதவுகிறது. இதுவரை 83,08,842 நபர்கள் பயனடைந்துள்ளனர்..

## 12.6. அரசுத்துறை இணைய தளங்களின் அணுகுதகமை (Accessibility), தரநிலைப்படுத்துதல்

தமிழகத்தின் 32 மாவட்டங்களில் அரசு இணையதளங்கள் S3WaaS (Secure, Scalable and Sugamya Website as a service) கட்டமைப்பின்படியும் அரசு வலைத்தளங்கள் வழிகாட்டி (GIGW) பாதுகாப்பு வழிமுறைகளின்படியும் புதுப்பிக்கப்பட்டுள்ளன .S3WaaS சேவையானது ஒரு இணையதள உருவாக்கம் மற்றும் இணையதளத்தை உருவாக்கி வெளியிட உதவும் ஒரு தேசிய தகவலியல் மையத்தின் மென்பொருள் ஆகும் .

இணைய பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இந்த சேவை தேசிய மேகக் கணினியத்தில் GIGW தரத்தில் பாதுகாப்பான இணையதளங்களை உருவாக்கிட இது உதவும். தமிழ்நாடு மின்னாளுமை முகமை அரசுத்துறைகளின் அணுகுமுறைகளைப் படிப்படியாகத் தரநிலைப்படுத்தும் பணிகளைச் செய்யும்.

**12.7. மக்கள் எண்**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2018-19 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடர்பான உரையின்போது வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் "மக்கள் எண்" எனும் எண்ணை உருவாக்கியுள்ளது என்றும் இந்த எண்ணானது மாநிலக் குடும்பத் தரவு தளம் அமைக்க ஒரு அடித்தளமாக இருக்கும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனவரி 2019–இல் மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மேலான பதிலறிக்கையின் போது தெரிவித்தார்கள் இந்தப் பயன்பாடு தங்குதடையற்ற வெளிப்படையான எளிதில்

அணுகுதகமையுடன் அரசின் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கும்.

### 12. 8. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

புவிசார் தகவல் அமைப்பு இடம்சார் அல்லது புவிசார் தரவுகளைக் கண்டறிந்து சேமிக்கவும், கையாளவும், பகுப்பாய்வு செய்யவும், நிர்வகிக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். புவியியல் தகவல்களை ஒருங்கிணைத்தல், சேமித்தல், பகுப்பாய்தல், பகிர்தல் மற்றும் வெளிக்காட்டுதல் ஆகியவற்றை செய்யும் ஒரு தகவல் மேலாண்மை அமைப்பாகும். தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பில் தமிழ்நாடு மாநில இடம்சார் தரவு உட்கட்டமைப்பு (TNSSDI), www.tngis.tn.gov.in என்ற வலைதளத்தில் புவிசார் தகவல் அமைப்பு தொடர்பான அனைத்து தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன .இது தமிழகத்தில் புவிசார் தகவல்களை ஒருங்கே கொண்ட இணையதளமாக விளங்குகிறது.

இத்திட்டத்திற்காக இதுவரை 29 துறைகள் / நிறுவனங்கள் தங்களது அடுக்குகளைப் பகிர்ந்துள்ளன.

- புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) உட்கட்டமைப்பில் 358 தமிழ்நாடு அடுக்குகளும் 68 ஹிலாரி அடுக்குகளும் பதிவேற்றப்பட்டுள்ளன.
- 499 பயனர் அங்கீகாரத் தகவல்கள் அரசுத் துறைகளின் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- 4282-க்கும் மேற்பட்ட பொது மக்கள் இந்த வலைதளத்தில் பதிவு செய்து பயன்பெற்று வருகின்றனர்

## 12.9. தகவல் தொழில் நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை (IT Security Audit)

அரசுத் துறைகளின் முக்கியத் தகவல்களைக் கொண்ட இணையதளங்களை பாதிப்புகள் மற்றும் ஊடுருவல்களிலிருந்து பாதுகாத்திட தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை ரூ.1.76 கோடி செலவில் தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. CERT-IN அமைப்பால்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அரசுத்துறைகளின் இணையதளங்கள் மற்றும் மென்பொருள்களைத் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

## 12.10. அம்மா இ – கிராமம்

தமிழக சட்டமன்றப் பேரவை விதி எண்.110-இன் கீழ் தமிழக சட்டமன்றப் பேரவையில் “அம்மா இ-கிராமம்” என்ற திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அந்தந்த கிராமத்தில், அம்மா இ-கிராமம் திட்ட நோக்கங்களை செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள கிராமப்புற மக்களுக்கு தொலை நோக்கு - மருத்துவம், தொலை நோக்கு கல்வி , ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகள், நம்பிக்கையான கம்பியில்லா சேவை (WiFi hotspot), திறன் மேம்பாடு, மின்மயமாக்கல் அறிவு மையம்

மற்றும் பொது சேவை மையங்கள் போன்ற சேவைகளின் பயன்பாடுகளைக் கொண்டுள்ள ஒரு தளத்தை இது உருவாக்க விழைகின்றது .

இந்த திட்டம் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி மூலம் செயல்படுத்தப்படும். இன்று வரை 1.62 கோடி பெறப்பட்டுள்ளது. முதலாம் கட்டமாக இந்த திட்டம் 6 கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

**ஆறு கிராமங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன**

| வ. எண். | கிராம பெயர் | வட்டாரம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | வன்னிக் கோனேந்தல் | மேலநீலித நல்லூர் | திருநெல்வேலி |
| 2 | பெரியாம்பட்டி | கரியமங்கலம் | தர்மபுரி |
| 3 | நெடுமொழியனூர் | மயிலம் | விழுப்புரம் |
| 4 | கோனேரிபட்டி | எடப்பாடி | சேலம் |
| 5 | வாங்கல் | கரூர் | கரூர் |
| 6 | விஸ்வநாதம் | சிவகாசி | விருதுநகர் |

## 12.11. தகவல் தொழில்நுட்பவியல் ஆளுமைக்கான மன்றம் (G – IT Forum)

தலைமைச் செயலகத்தில் உயர்பதவியில் உள்ள அலுவலர்களுக்கு குறிப்பிட்ட தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கலந்துரையாடல் ஒன்று மாதந்தோறும் நடத்தப்படுகிறது.

## 12.12. இணையவழித் தேர்வுகளை சேவையாக வழங்குதல்

இணையவழித் தேர்வு முறையைப் பல்வேறு அரசுத் துறைகள் தங்கள் காலிப்பணியிடங்களை நிரப்ப குறுகிய காலத்திலும் பாதுகாப்பான முறையில் பயன்படுத்தலாம். இதில் தேர்விற்கு முந்தைய நிலை மற்றும் தேர்விற்குப் பிந்தைய நிலை செயல்பாடுகள் அடங்கும். இதற்காக தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA), திருவாளர்கள் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேன்ஞ் இன்பர்மேஷன் டெக்னாலஜி லிமிடெட் (M/s. (National Stock Exchange Information Technology Limited (NSEIT)) என்ற நிறுவனத்தை இதற்கென தேர்வு செய்துள்ளது.

## 12.13. தமிழ்நாடு பொறியியல் கல்வி சேர்க்கைக்கான கலந்தாய்வு (TNEA)

தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின் (DOTE) கீழ் செயல்படும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பட்டப்படிப்புகளைத் தேர்வு செய்யும் மாணவர்களுக்கு இணையவழி கலந்தாய்வு நடத்த உயர்கல்வித் துறை உத்தேசித்துள்ளது.

சவால் மிகுந்த இப்பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்திற்கு (DOTE) இணையவழிக் கலந்தாய்விற்கான மென்பொருளை பயன்படுத்திடத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்கும்.

## 12.14. மின் அலுவலகம்

மின் அலுவலகம் என்பது அலுவலக நடைமுறைகளை மின்னணு முறையில்

செயல்படுத்துவதற்கான ஒரு கருவியாகும். கோப்புகளை விரைவாக முடித்திட மின் அலுவலகத்தின் மின்னணுக்கோப்பு மேலாண்மை பயன்படும். பணிப்பாய்வு மேலாண்மையானது கோப்புகளை உருவாக்குதல், இயக்கம், கண்காணித்தல் மற்றும் ஒப்புதல் ஆகியவற்றில் மின்னணுமுறையில் செயல்படுத்த உதவுகிறது, இதன் விளைவாக மனிதவளத்தைத் திறம்படப் பயன்படுத்திட, தாமதங்களைத் தவிர்த்து, சிறந்த நிர்வாகத்திற்கு வழிவகுக்கிறது.

### 12.15. இ-அடங்கல் வலை பயன்பாடு

கிராமம் / வட்டம் / மாவட்டம் மற்றும் மாநில அளவில் விவசாய உற்பத்தியைக் கணக்கிடும் ஒரு முக்கிய அடிப்படை வருவாய்துறை ஆவணமாக அடங்கல் கருதப்படுகிறது. இது கிராம நிர்வாக அலுவலரால் (VAO) பராமரிக்கப்படும் கிராமக் கணக்கு எண் 2 ஆகும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) "அடங்கலின்" வலைப்பதிப்பை உருவாக்கியுள்ளது.

இ-அடங்கல் வலை பயன்பாடு 26.10.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது

### 12.16. இ – அடங்கல் கைபேசி செயலி

அடங்கலுக்கான கைபேசிச் செயலியைத் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உருவாக்கியுள்ளது இது 05.03.2019 அன்று தொடங்கப்பட்டது.

மின் அடங்கலின் அனைத்து செயல்பாட்டுச் சேவைகளும் எளிய முறையில், இந்தச் செயலி மூலம் விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 13. மின்னாளுமை முயற்சிகளின் தொகுப்பு

சென்னையில் 8.10.2018 அன்று நடைபெற்ற CII-Connect 2018 நிகழ்வின்போது நமது மாநிலத்தில் மின்னாளுமை தொடர்பான திட்டமுயற்சிகள் பற்றிய தொகுப்பு வெளியிடப்பட்டது. இந்தத் தொகுப்பு அனைத்து

அரசுத் துறைகளின் புதுமையான முயற்சிகளைப் பொதுமக்கள் அறிய உதவுகிறது.

**14. திறன் மேம்பாடு**

திறன் மேம்பாடு என்பது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) ஒரு குறிக்கோள் திட்டமாகும். அரசியல் மற்றும் கொள்கை அளவிலான முடிவெடுப்பவர்களுக்கு தொழில் முறையிலான உதவிகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகளின் விவரம் :-

- மின் கையெழுத்து விழிப்புணர்வுத் திட்டம்
- சிந்தனை வடிவமைப்புத் திட்டம்
- மின் அலுவலக மென்பொருள் பயிற்சி



**படம் – 36 : பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் செயலாக்கம் குறித்த பயிற்சி**



**படம் – 37 : பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் செயலாக்கம் குறித்த பயிற்சி**

## 15. தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்ட மென்பொருட்கள்

| வ. எண் | துறைகள் | திட்டத்தின்பெயர் | இணைய முகவரி (சீர்வள இருப்பிடம்) (URL) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | தமிழ்நாடுவீட்டுவச தி வாரியம் (TNHB) மற்றும் தமிழ்நாடு அரசு வாடகை வீடு திட்டம் (TNGRHS) | https://tnhb.tn.gov.in/page/view/tngrhs |
| 2 | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வாடகை மேலாண்மை திட்டம் | https://tnhb.tn.gov.in/ |
| 3 | தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை | தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமைக்கு வலைதளம் உருவாக்குதல் | https://tnsdma.tn.gov.in/ |
| 4 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | சொத்து மேலாண்மை (AMS) | https://ams.tnegov.in |

| | | | |
|---|---|---|---|
| 5 | தொழிலாளர் நலத்துறை | சட்ட அளவியல் புகார் கண்காணிப்பு அமைப்பு (Legal Metrology Complaint Tracking System ) | https://tnlegalmetrology.in/ |
| 6 | ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை | தமிழ்நாடு எண்முறைப்படுத்தப்பட்ட காப்பக வலைதளம் (Digiarchives Web Portal) | https://digiarchives.tn.gov.in |
| 7 | சென்னை பெரு நகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) | இணையவழியில் ஒற்றை சாளர முறையில் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வழங்குதல், நிறைவு சான்று வழங்குதல் மற்றும் வசித்தலுக்கான சான்று வழங்குதல் போன்ற சேவைகளைஇணையம் வழியாக ஒற்றை சாளர முறையில் உருவாக்குதல் | https://onlineppacmda.tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 8 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு | https://tngis.tn.gov.in |
| 9 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | மின்-மாவட்டத்திட்டம் முதல் கட்டம்-1 (92 சேவைகள்) இ-சேவை<br><br>மின்-மாவட்டத் திட்டம் இரண்டாம் கட்டம்-2 319 கூடுதல் சேவைகள் (இ-சேவை) | https://tnesev.tn.gov.in/ |
| 10 | பெரியார் பல்கலைக் கழகம் | இணையம் வழியாக தொலைதூர கல்விக்கு விண்ணப்பித்தல் | http://pride.cmschennai.com/ |
| 11 | வனத்துறை | TNFUSRC-க்கு ஆன்லைன் தேர்வுகள் நடத்த மென்பொருள் உருவாக்குதல் | https://www.forests.tn.gov.in/pages/view/tn-forest-news |
| 12 | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை – | இணையவழி தேர்வு முறையானது | ஆசிரியர் தேர்வு வாரியம்/ஆசிரியர் தகுதி தேர்வு |

| | | | |
|---|---|---|---|
| | இணையவழி தேர்வு முறை | அரசின்பல்வேறு துறைகளின் காலியிடங்களை நிரப்ப குறுகிய இடைவெளியில் பாதுகாப்பான முறையில் நடத்தப்படும். இது தேர்வுக்கு முந்தைய மற்றும் பிந்தைய நடவடிக்கைகளை உள்ளடக்கியது. | https://trbtet.onlineregistrationform.org/TNTRB/index.jsp<br>முதுகலை கணினி பயிற்றுவிப்பாளர்கள்https://trbpgc.onlineregistrationform.org/TRBPGCI/<br>தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம். https://tnpcb.onlineregistrationform.org/TNPCB/LoginAction_loadIndex.action |
| 13 | எல்காட் நிறுவனம் | திறந்த முறைஅரசின் தரவு | https://tn.data.gov.in/ |
| 14 | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை | மெய்நிகர் கற்றல் இணையதளம் மற்றும் இணைய வழி கற்றலுக்கான வலைதளம் உருவாக்கி பகுப்பாய்விற்கான கணினியில் ஒரு | https://tamilnaducareerservices.tn.gov.in/ |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கை பலகை உருவாக்குதல் | |
| 15 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | மாநில சேவைகளுக்கான முகப்பு வழி | http://www.tn.gov.in/ |
| 16 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | மின் மாவட்டத் திட்டம் | https://edistricts.tn.gov.in:8443/certificates_csc/ |
| 17 | அனைத்து அரசுத் துறைகள் | இ-தால் | https://etaal.gov.in |
| 18 | நிலச் சீர்த்திருத்த ஆணையரகம் | முதலைமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் | https://oap.tn.gov.in/cmupt/ |
| 19 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | நிரந்தரசேர்க்கை மையம் (5 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஆதார் பதிவு செய்தல்) | https://uidai.gov.in/aadhaar_dashboard/ |
| 20 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | குறுஞ்செய்தி வாயிலாக சேவை நிலை தெரிந்துக் கொள்ளும் வசதி | https://services.mgov.gov.in/ |

| | | | |
|---|---|---|---|
| 21 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் | https://makkal.tn.gov.in/makkal /login |
| 22 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | இணையவழி பட்டா மாற்றம் | https://tamilnilam.tn.gov.in/CSC<br>https://tamilnilam.tn.gov.in/Revenue/login.html |
| 23 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | உள்ளங்கையில் சான்றிதழ் | https://tnegov.in/login |
| 24 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்க்ஷார்தா அபியான் | https://www.pmgdisha.in |

## 16. விருதுகள்

### மாண்புமிகு முதலமைச்சரின் மாணவர்களுக்கான மின்னாளுமை உயரிய விருது

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மின்னாளுமை ஆர்வலர்களிடையே மின்னாளுமை குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு, மாணவர்களுக்கான "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மின்-ஆளுமைக்கான உயரிய விருதை" அறிவித்துள்ளது.

08.10.2018 அன்று சென்னையில் நடைபெற்ற "கனெக்ட் 2018" (CONNECT 2018) நிகழ்வின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டன.




படம் – 38 : கனெக்ட் 2018 நிகழ்வில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கம்

## 17. தமிழ்நாடு மின்னாளுமை முகமை பெற்ற விருதுகள்

### 17.1. இ-பிஸ் (e-Biz) விருது - தமிழ்நாடு மின்ஆளுமை முகமை உருவாக்கிய ஒற்றைச் சாளர அமைப்பு

மாநிலத்தில் தொழில்துறைத் திட்டங்களுக்கு ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கும் பொருட்டு முதலீட்டாளர் சேவை இணையம் ஒன்றினை உருவாக்கியதற்காக தமிழ்நாடு மின்ஆளுமை முகமை இந்த விருதினைப் பெற்றது. மேலும் பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்களிடமிருந்து அனுமதி பெறும் முறையை எளிமையாக்கியதற்காகவும், கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை எளிய முறையில் வடிவமைத்ததற்காகவும், இந்த விருது வழங்கப்பட்டது.



**படம் – 39**

## 17.2. வெப் ரத்னா விருது

உலகளாவிய வலையின் ஊடகத்தைப் (World Wide Web) பயன்படுத்தி மின்-ஆளுமையில் முன்மாதிரியான முன்முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக

டிஜிட்டல் இந்தியா விருதுகள் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் (MeitY) நிறுவப்பட்டுள்ளது.

குடிமக்களின் பல்வேறு விதமான எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்ய, மேம்பட்ட அணுகுதகமை கொண்ட வலைத்தளங்கள் மற்றும் இணையதளங்களுக்கு, பல்வேறு பிரிவுகளின் கீழ் "வெப் ரத்னா" விருது வழங்கப்படுகிறது .

**18. நிதி நிலைச் செயல்பாடுகள்**

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை பொதுமக்களுக்கு இணையவழி சேவைகளை அரசு இ-சேவை மையங்கள் மூலம் வழங்கி வருகிறது. இதற்கென சேவைக்கட்டணம் மாநில உயர்மட்டக்குழுவின் பரிந்துரையின் பேரில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கைஅட்டவணை:-**

| முகமை | வருவாய் பங்கு | | |
|---|---|---|---|
| | அரசு பொது நிறுவனங்கள்/ அரசு சாரா நிறுவனங்கள் | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை | மின் மாவட்ட சங்கங்கள் |
| அரசு சாரா நிறுவனங்கள் | 80% | 15% | 5% |
| அரசு பொது நிறுவனங்கள் | 70% | 25% | 5% |

**தணிக்கை செய்யப்பட்ட தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் நிதி நிலை அறிக்கை அட்டவணை:-**

| | 2015-2016 | 2016-2017 | 2017-2018 | 2018-19 (தணிக்கை செய்யப்படாதது) |
|---|---|---|---|---|
| | ரூபாய் கோடியில் | | | |
| மொத்த வருமானம் | 5.30 | 3.00 | 7.50 | 12.30 |
| மொத்த செலவினம் | 8.71 | 3.00 | 8.08 | 10.50 |
| உபரி / பற்றாக்குறை | (-) 3.41 | - | (-) 0.58 | (+) 1.80 |

## அத்தியாயம் - 4

# தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV)

### 1. முன்னுரை

"அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம்" 04.10.2007 அன்று, நிறுவனச் சட்டம் 1956-இன் கீழ் நிறுவப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் தொடங்குவதற்கு முன்னர், கம்பிவடத் தொலைக்காட்சி வர்த்தகத்தில், சில பெரிய தனியார் நிறுவனத்தினர் ஆதிக்கம் செலுத்தி, பொது மக்களிடம் அதிகப்படியான கட்டணம் வசூலித்து வந்தனர். இந்நிலையில், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், மற்றும் பொது மக்களுக்கு உயர்தரமான கேபிள் டிவி சேவைகளை வழங்கும் பொருட்டும் 2011-ஆம் ஆண்டு மே மாதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் புனரமைக்கப்பட்டது. இந்நிறுவனம் "தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (Tamil Nadu Arasu Cable TV Corporation Limited)" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**2. தொலைநோக்குப் பார்வை**

குறைந்த விலையில் உயர்தர கம்பிவடத் தொலைக்காட்சி, இ-சேவை மற்றும் இணைய சேவைகளை, பொதுமக்களுக்கு நவீன மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களைக் கொண்டு வழங்குவதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. குறிக்கோள்**

- தரமான கம்பிவடத் தொலைக்காட்சி சேவையைக் குறைந்த கட்டணத்தில் உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்கள் மூலமாகப் பொதுமக்களுக்கு வழங்குதல்.
- உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஏதுவான சூழலை உருவாக்கும் வகையில் கம்பிவடத் தொலைக்காட்சி மற்றும் இணைய சேவையை வழங்குதல்.
- கம்பிவடத் தொலைக்காட்சி சேவையில் டிஜிட்டல் சேவை முறையை ஊக்கப்படுத்தி, அனலாக் ஒளிபரப்பு நிலையினை நீக்குதல்.

- பொது மக்களின் நலன் கருதி முன் மாதிரி இ-சேவை மையங்களைத் தொடங்குதல்.
- பொது மக்களின் நலனுக்காக உயர்தர இணைய சேவையை குறைந்த கட்டணத்தில், உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்கள் மூலமாக வழங்குதல்.


**4. நோக்கங்கள்**

- இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய (TRAI) விதிமுறைகளின் படி, டிஜிட்டல் கம்பிவடத் தொலைக்காட்சி சேவையை, அதிக அளவிலான வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்த்தல்.
- இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்.
- குடிமக்களை மையமாகக் கொண்ட சேவைகளை உள்ளாட்சி அமைப்புகள், வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள அரசு இ-சேவை மையங்கள் மூலம் வழங்குதல்.
- இல்லந்தோறும் இணையவழி இணைப்பு வசதியினை வழங்குதல்.


## 5. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனமானது, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோரது தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவன அமைப்பு முறை கீழ்வருமாறு:-

**மாநில அளவில்**



**மாவட்ட அளவில்**




**6. சாதனைகள்**

**6.1. அனலாக் ஒளிபரப்பில் கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகள்**

"தரமான அனலாக் சேவையை, சந்தாதாரர்கள் குறைந்த கட்டணமான ரூ.70/-ஐ உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்களிடம் செலுத்திப் பெறும் பொருட்டு, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ரூ.3 கோடி வழங்கப்படும்" - என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் 30.08.2011 அன்று அறிவித்தார்கள். மேற்படி சந்தா தொகையிலிருந்து, ரூ.20/-ஐ உள்ளூர் கம்பிவடத்

தொலைக்காட்சி ஆபரேட்டர்கள், தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்திற்குச் செலுத்துவார்கள்.

தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து இடங்களில் தனது சொந்த கட்டுப்பாட்டு அறைகள் மூலமாகவும், தமிழ்நாடு முழுவதும் 77 இடங்களில் உள்ள மாவட்ட/வட்ட உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்களின் கட்டுப்பாட்டு அறைகளை குத்தகைக்கு எடுத்து, அவற்றின் மூலமாகவும் பொதுமக்களுக்கு 02.09.2011 முதல் தமிழ்நாடு முழுவதும் (சென்னை தவிர்த்து) மற்றும் 20.10.2012 முதல் சென்னை மாநகரிலும் அனலாக் முறையிலான கம்பிவடத் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவையினை தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் வழங்கி வருகிறது.

02.09.2011 அன்று 4.94 இலட்சமாக இருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை, அரசின் சீரிய முயற்சியால் 26,474 உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்கள் மூலம் 70.52 இலட்சம் இணைப்புகளாக உயர்ந்துள்ளது. மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு

அமைச்சகத்தின் உத்தரவின்படி, 2018 செப்டம்பர் மாதம் முதல் தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், அனலாக் முறை ஒளிபரப்பினை முற்றிலும் நிறுத்திவிட்டது.

## 6.2. டிஜிட்டல் கம்பி வடத் தொலைக்காட்சி சேவை

மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, நாடு முழுவதும் உள்ள கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகள் 4 கட்டங்களாக டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். இதன்படி, நான்காம் கட்டத்தின் கடைசி நாளான 31.03.2017-க்குப் பிறகு நாடு முழுவதும் கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகள் டிஜிட்டல் முறையில் மட்டுமே வழங்கப்பட வேண்டும். எனவே, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், டிஜிட்டல் முறையில் கம்பிவடத் தொலைக்காட்சி சேவையை வழங்குவது தொடர்பாக 05.07.2012 அன்று சென்னை மாநகருக்கும், 23.11.2012 அன்று தமிழ்நாட்டின் இதர பகுதிகளுக்கும் டிஜிட்டல் உரிமம் (Digital Addressable System Licence) கோரி மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்தது.

அதன் அடிப்படையில் மத்திய அரசு, 17.04.2017 அன்று தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமத்தை வழங்கியுள்ளது. இந்தியாவிலேயே மாநில அரசு நிறுவனத்திற்கு DAS உரிமம் கிடைக்கப்பெற்ற முதல் நிறுவனம், தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் ஆகும்.

தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் 60 இலட்சம் தரநிலை வரையறை மேலமர்வு பெட்டிகள் (Standard Definition Set Top Box), 10 இலட்சம் உயர் வரையறை மேலமர்வு பெட்டிகள் (High Definition Set Top Box) கொள்முதல் செய்யும் பொருட்டு 06.05.2017 அன்று உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரியது. அதில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டு, 60 இலட்சம் தரநிலை வரையறை (SD) மேலமர்வுப் பெட்டிகள் மற்றும் 10 இலட்சம் உயர் வரையறை (HD) மேலமர்வு பெட்டிகள் கொள்முதல் செய்ய ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சென்னை தலைமைக் கட்டுப்பாட்டு அறையில் அமைக்கப்பட்டிருந்த MPEG2 தொழில்நுட்பத்தை மாற்றி, மிகத் துல்லியமான முறையில்

அதிக எண்ணிக்கையிலான சேனல்களை டிஜிட்டல் முறையில் வழங்கும் வகையில் MPEG4 என்ற புதிய தொழில்நுட்பத்திற்கு தரம் உயர்த்தப்பட்டது. தரம் உயர்த்தப்பட்ட சென்னை டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறை மற்றும் இலவச செட்டாப் பாக்ஸ் வழங்கும் சேவை ஆகியவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.09.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இதுவரை, 34.51 இலட்சம் தரநிலை வரையறை மேலமர்வுப் பெட்டிகள் (SD Set Top Box) 16,907 உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.07.2018 அன்று உயர் வரையறை மேலமர்வுப் பெட்டிகள் (SD Set Top Box) வழங்கும் சேவையை சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தொடங்கி வைத்தார்கள். 2,154 உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலமாக 18,253 சந்தாதாரர்களுக்கு உயர் வரையறை மேலமர்வு பெட்டிகளை (SD Set Top Box) வழங்கியுள்ளது. தற்போது மாநிலம் முழுவதிலும், 12 இடங்களில் உயர் வரையறை கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**7. இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய (TRAI) புதிய கட்டண ஆணை**

TRAI வெளியிட்டுள்ள புதிய கட்டண ஆணையின்படி, கட்டணமில்லா 100 சேனல்களுக்கு நெட்வொர்க் கட்டமைப்புக் கட்டணமாக ரூ.130/- + GST நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு 25 கூடுதல் சேனல்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.20/- + GST ஆகும். இந்நிலையில், தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், டிஜிட்டல் கம்பிவடத் தொலைக்காட்சி ஒளிபரப்பினை மிகக் குறைந்த விலையில் நெட்வொர்க் கட்டமைப்பு கட்டணமாக ரூ.120/- + GST-ஐ பெற்று, 142 இலவச சேனல்களை வழங்கி வருகிறது. கட்டண சேனல்களை சந்தாதாரர்கள் தம் விருப்பத்திற்கேற்ப தேர்வு செய்து, அதற்காக ஒளிபரப்பாளர்கள் நிர்ணயித்துள்ள கட்டணத்தைச் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

TRAI விதிமுறைகளின்படி, நெட்வொர்க் கட்டமைப்புக் கட்டணம், வருவாய்ப் பங்கீட்டு அடிப்படையில் தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV) மற்றும் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் (LCO) ஆகியவற்றிற்கு

இடையேயான விகிதாசாரம் 55:45 என நிர்ணயிக்கப்பட்டது. எனினும், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு நெட்வொர்க் கட்டமைப்புக் கட்டணத்தில் 65% தொகை உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், டிஜிட்டல் விநியோகத்தைச் சிறப்பாக செயல்படுத்தும் உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டர்களுக்கு கூடுதலாக 6% வரை நெட்வொர்க் கட்டமைப்புக் கட்டணத்தில் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும், TRAI ஒப்புதலுடன் அதிகபட்ச சில்லறை கட்டணத்திலிருந்து ஒளிபரப்பாளர்களால் அறிவிக்கப்பட்ட கட்டண சேனல்களுக்கு 20% விநியோகக் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டது. இதில், தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV) மற்றும் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் (LCO) ஆகியவற்றிற்கு 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

கூடுதல் வருவாய்க்கான சந்தா கட்டணம் குறித்து Logical Channel Number (LCN), Middleware, Private Local Channels (PLCs), Video On Demand (VoD) ஆகியவற்றிடமிருந்து அவ்வப்போது பொருத்தமான

முன்மொழிவுகளை உரிய அழைப்புகள் மூலம் குறித்த நேரத்தில் கோரப்படுகிறது.

**8. TACTV அரசு இ-சேவை மையங்கள்**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 04.08.2014 அன்று தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்களிலும், அரசு இ-சேவையினைத் தொடங்கும் என அறிவித்தார்கள். தற்சமயம், தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனமானது, தமிழ்நாடு முழுவதும் 661 அரசு இ-சேவை மையங்களைச் செயல்படுத்தி வருகிறது. மின் ஆளுமை முகமையின் வழிகாட்டுதலின்படி, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு துறை சார்ந்த சேவைகள் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**8.1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய சேவைகள்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் சான்றிதழ்களை அரசு இ-சேவை மையத்தில் பதிவேற்றம் செய்யும் வசதி

23.04.2018 அன்று ஆரம்பிக்கப்பட்டது. 31.03.2019 வரை 11,673 சான்றுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 8.2. அடையாள அட்டை அச்சிட்டு வழங்குதல்


ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை அச்சிட்டு வழங்கும் சேவை 16-04-2018 அன்று தொடங்கப்பட்டது. 31-03-2019 அன்றுள்ளபடி, அரசு இ-சேவை மையங்கள் மூலமாக 38,418 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் 4,832 அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அடையாள அட்டை அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 31-03-2019 வரை 35,12,424 வாக்காளர் வண்ண அடையாள அட்டைகள் (EPIC) அச்சிட்டு வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாநில அரசின் சில துறைகள் மற்றும் பொது நிறுவனங்கள், தங்கள் பணியாளர்களுக்கு அடையாள அட்டை அச்சடிப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு வருகின்றன.

## 8.3. அரசு இ-சேவை மையங்களின் சாதனை

அரசு இ-சேவை மையங்கள் தொடங்கப்பட்ட நான்கு ஆண்டுகளில் 2,10,85,794 பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன.

**தமிழ்நாடு அரசு கம்பி வடத் தொலைக்காட்சி நிறுவனம் இ-சேவை மையங்களின் வாயிலாக வழங்கப்படும் சேவைகளின்படி பரிவர்த்தனைகள் விவரம்**

| வ. எண் | வருடம் | வருவாய்த் துறை மூலம் வழங்கப்படும் சேவைகள் | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டணம் செலுத்தும் சேவைகள் | சென்னை பெருநகர் குடிநீர்வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் குடிநீர்கட்டணம் செலுத்தும் சேவைகள் | பதிவு(ஆதார்) நிறுவனத்தின் சேவைகள் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களின் சான்றுகள் பதிவேற்றும் சேவைகள் | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சேவைகள் | வாக்காளர் வண்ண அடையாள அட்டை அச்சிட்டு வழங்கும் சேவைகள் | சென்னை பெருநகர மாநகராட்சியின் வரிகள் செலுத்தும் சேவைகள் | ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை அச்சிட்டு வழங்கும் சேவைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2014-2015 | 97684 | 24 | 0 | 276 | 0 | 0 | 0 | 0 | 0 | 97984 |
| 2 | 2015-2016 | 2064385 | 14452 | 10645 | 1402326 | 10606 | 103 | 0 | 154317 | 0 | 3656834 |
| 3 | 2016-2017 | 2926650 | 65018 | 25281 | 1829099 | 1067 | 6331 | 1131046 | 201200 | 0 | 6183602 |
| 4 | 2017-2018 | 5016258 | 42272 | 24409 | 737323 | 0 | 2277 | 1640675 | 176414 | 0 | 7639628 |
| 5 | 2018-2019 | 2471669 | 24672 | 14457 | 0 | 0 | 10615 | 740703 | 205212 | 38418 | 3505746 |
| | Total | 12576646 | 146438 | 74792 | 3968934 | 11673 | 19326 | 3512424 | 737143 | 38418 | 21085794 |



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டணம் செலுத்தும் சேவைகள்
3.50%
0.18%
ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை அச்சிட்டு வழங்கும் சேவைகள்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சேவைகள்
0.09%
16.66%
வாக்காளர் வண்ண அடையாள அட்டை
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களின் சான்றுகள் பதிவேற்றும் சேவைகள்
0.06%
18.82%
மத்திய (அப்னா) நிறுவனத்தின் சேவைகள்
59.65%
வருவாய்த் துறை சேவைகள்
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் குடிநீர் கட்டணம் செலுத்தும் சேவைகள்
0.35%
0.69%
சென்னை பெருநகர மாநகராட்சியின் வரிகள் செலுத்தும் சேவைகள்


**படம் – 40**

## 8.4. தனியார் இன்டர்நெட் ப்ரௌசிங் சென்டர் பதிவு செய்தல்

அரசு இ-சேவை மைய விரிவாக்கத்தின் முயற்சியாக, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் 13.01.2018 அன்று விருப்பமுள்ள தனியார் இன்டர்நெட் ப்ரௌசிங் மையங்களை அரசு இ-சேவை மையங்களின் தனியுரிமை நிறுவனங்களாகச் செயல்பட வருவாய்ப் பங்கீட்டின்படி விருப்ப வெளிப்பாடு விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. அதன் அடிப்படையில் 500 விண்ணப்பதாரர்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதற்காக பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் விவரம் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 27.02.2019 அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

## 9. TACTV நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள்

தமிழக அரசு அரசாணை (நிலை) எண்.10, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 01.08.2016-இன் மூலம், மின்ஆளுமை இயக்ககம் / மின்ஆளுமை முகமையை தமிழ்நாட்டில் புதிய ஆதார் சேர்க்கை செய்யும் பணிக்காக பதிவாளராக நியமித்ததுடன், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) மற்றும் தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV) ஆகிய நிறுவனங்களை ஆதார் சேர்க்கைப் பதிவு செய்யும் நிறுவனங்களாகச் செயல்பட ஏற்பளித்துள்ளது.

இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு, ஆதார் பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு, பதிவு முகவர் குறியீட்டு எண்ணை ஒதுக்கீடு செய்துள்ளது.


தற்சமயம், 311 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள், 483 முகப்புகளை கொண்டு 32 மாவட்டங்களில்

செயல்பட்டு வருகிறது. அத்துடன் சென்னை பெருநகர எல்லையில் "நடமாடும் ஆதார் சேர்க்கை மையம்" ஒன்றும் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் மூலம் 31.3.2019 வரையில் 27,37,579 புதிய ஆதார் பதிவுகளும் மற்றும் 49,37,787 ஆதார் பதிவுத் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| TACTV நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களின் செயல்பாடுகளின் விவரம் | | | |
|---|---|---|---|
| வ. எண் | ஆண்டு | புதிய ஆதார் பதிவுகள் | ஆதார் திருத்தங்கள் |
| 1 | 2016-17 | 12,16,147 | இல்லை |
| 2 | 2017-18 | 10,41,427 | 15,82,526 |
| 3 | 2018-19 | 4,80,005 | 33,55,261 |
| | **மொத்தம்** | **27,37,579** | **49,37,787** |

**பரிவர்த்தனைகள்**




**ஆண்டு**

**ஆதாருக்காக புதிதாக பதிவு செய்தவர்களின் மொத்த எண்ணிக்கை, மற்றும் ஆதார் திருத்தங்களின் மொத்த எண்ணிக்கை**

**படம் – 41**

பிப்ரவரி – 2019-ல், தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், 0-5 வயதுள்ள குழந்தைகளுக்கான ஆதார் பதிவினையும் தனது நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களில் தொடங்கியுள்ளது.

## 10. "இல்லந்தோறும் இணையம்" - இணையவழி சேவை

14.09.2015 அன்று மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ISP – Class-B உரிமம் வழங்கியுள்ளது. அதன்படி, 'இல்லந்தோறும் இணையம்' இணையவழி சேவை வழங்கும் திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.03.2016 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது ரயில்வட நிறுவனம் மற்றும் தொழில் பங்கீட்டாளர்களால், வருவாய்ப் பங்கீட்டு அடிப்படையில், இல்லங்களுக்கு இணைய சேவை வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி வணிகத்தை விரிவுபடுத்தி, பொதுமக்கள் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு இணையதளம் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனமானது, தனக்கு சொந்தமான துணை நிறுவனத்தை ஆரம்பிக்க

உத்தேசித்துள்ளது. 31.03.2019 அன்று, 28 வணிக பங்குதாரர்கள் மற்றும் 5 ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக 5,697 சந்தாதாரர்களுக்கு இணையதள சேவை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) மூலம் "பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" திட்டங்கள் மாநிலம் முழுவதும் செயல்படுத்தும் பொழுது, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், வருவாய் ஈட்டுவதிலும், சந்தாதாரர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதிலும் பெரிய நிறுவனங்களுடன் போட்டியிடும் சூழ்நிலையை ஏற்படுத்திடும்.

**11. அரசுப் பள்ளிகளுக்கு இலவச அகண்ட அலைவரிசை இணையம்**

தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள 366 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.9.06 கோடி மதிப்பீட்டில் இலவச இணைய வசதி ஏற்படுத்த நிர்வாக அனுமதி அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. முதற்கட்டமாக

இத்திட்டத்தை 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்த ரூ1.23 கோடி நிதி விடுவித்து அரசு உத்திரவிட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் (TANFINET) பாரத்நெட் திட்டம் நடைமுறைக்கு வரும்போது செயல்படுத்தப்படும்.

## 12. தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு

தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், தமிழக அரசின் ரூ.25.00 கோடி பங்கு மூலதனத்தில் துவக்கப்பட்டது. மேலும், இந்நிறுவனம் ரூ.39.35 கோடி அரசிடமிருந்து காலக்கடனாகப் பெற்றுள்ளது. 2008-09 நிதியாண்டில் ரூ.2.44 கோடி வருவாய் மட்டுமே ஈட்டிய தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், 2013-14 நிதியாண்டில் ரூ.163.92 கோடி வருவாயும், 2014-15 நிதியாண்டில் ரூ.181.91 கோடி வருவாயும், 2015-16 நிதியாண்டில் ரூ.223.53 கோடி

வருவாயும், 2016-17 நிதியாண்டில் ரூ.235.90 கோடி வருவாயும், 2017-18 நிதியாண்டில் ரூ.221.89 கோடி வருவாயும் ஈட்டியுள்ளது.


| நிதியாண்டு | வருவாய் (ரூ. கோடியில்) |
|---|---:|
| 2008-09 | 2.44 |
| 2009-10 | 1.19 |
| 2010-11 | 2.00 |
| 2011-12 | 64.8 |
| 2012-13 | 155.3 |
| 2013-14 | 163.92 |
| 2014-15 | 181.91 |
| 2015-16 | 223.53 |
| 2016-17 | 235.9 |
| 2017-18 | 221.89 |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2011-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தை புனரமைத்த பின்னர்,

2012-2013 முதல் 2016-2017 வரையிலான நிதியாண்டுகளில், சந்தாதாரர்கள் எண்ணிக்கை அதிகரித்ததாலும் மற்றும் கூடுதல் வருவாய் வாய்ப்புகளை உருவாக்கியதன் மூலமும் இலாபத்தினை ஈட்டியுள்ளது.

2017-2018 நிதியாண்டில் இந்நிறுவனம் ரூ.221.90 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. அத்துடன் ரூ.35.63 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான வருவாய் இழப்பு, கொள்முதல் செய்யப்பட்ட மேலமர்வுப் பெட்டிகள் (Set Top Box) மற்றும் மேலமர்வுப் பெட்டிகளின் தேய்மானம் (Depreciation) ஆகியவற்றால் ஏற்பட்டதாகும்.

**இலாபம் மற்றும் இழப்பு**




**ஆண்டு**

**படம் – 42**

2018-2019 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தின் வருவாய் ரூ.268.89 கோடி என இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், டிஜிட்டல் முறையில் கேபிள் சிக்னலை வழங்கிய காரணத்தினால், கடன் அடிப்படையில் (supplier line of credit model) ரூ.612.21 கோடி மதிப்பிலான 36.40 இலட்சம் மேலமர்வுப் பெட்டிகளை வாங்கியுள்ளது. அதிக முதலீடு செய்ததால், கடனை உரிய காலத்தில் செலுத்துவதற்கும், மற்றும் ஒளிபரப்பு சம்பந்தப்பட்ட செலவுகளை மேற்கொள்வதற்கும், நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது. தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் ஈட்டிய வருவாயில், 31.03.2019 அன்று ரூ.186 கோடியை விற்பனையாளர்களுக்கு திருப்பி செலுத்திவிட்டது. மேலமர்வு பெட்டிகள் (Set Top Box) கொள்முதல் காரணமாக, பணப்பாய்வு பற்றாக்குறை (Accumulated Cash flow deficit) ஏற்பட்டதால், அரசாங்க உத்தரவாதத்தின்

(Government Guarantee) மூலம் 2019-20-ஆம் நிதியாண்டிற்காக ரூ.100 கோடி கடன் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV) எதிர்வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் (TANFINET) வரையறுக்கப்பட்ட உள்கட்டமைப்பை உபயோகப்படுத்துவதன் மூலம் அலைவரிசைக்கான செலவை குறைத்தும், சந்தாதாரர்களின் எண்ணிக்கையை அதிகரித்தும், உயரிய தொழில்நுட்ப மேலமர்வு பெட்டிகளை (Advanced Set Top Box) அறிமுகப்படுத்துவதன் மூலமும் அதிக லாபம் ஈட்டும்.

# அத்தியாயம் - 5

## தமிழ் இணையக் கல்விக்கழகம்

### 1. முன்னுரை

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 1983-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் தேதி அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இது தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தமிழ் இணையக் கல்விக்கழகமாக 2010-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16-ஆம் தேதியிலிருந்து பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### 2. தொலைநோக்குப் பார்வை

இணையம் வழியாக வெளிநாடுகளில் வாழும் தமிழ்ச் சமுதாயத்தைத் தொடர்பு கொள்ளுதல்.

### 3. குறிக்கோள்

அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரையுள்ள தமிழ்க் கல்வியை உலகெங்கும் வாழும் தமிழ்ச் சமுதாயத்திற்கு அளித்தல்.

**4. நோக்கங்கள்**

1. தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாடு போன்ற ஆதாரங்களைப் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் மற்றும் தமிழ் ஆர்வலருக்கும் இணையம் வழியாக அளித்தல்.
2. தமிழியியலில் சான்றிதழ், பட்டயம் மற்றும் பட்டம் போன்ற படிப்புகளைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாக அளித்தல்.
3. தமிழ் பாரம்பரியத்தோடு கூடிய தமிழ் கற்றலுக்கான பாடங்களைத் தொகுத்தல்.
4. தமிழர்களால் உருவாக்கப்பட்ட அனைத்து கல்விப் பொருண்மைகளைத் தொகுத்துப் பொதுமக்களுக்கு வெளியிடுதல்.
5. கணினித் தமிழை வளர்த்தல்.
6. இவை அனைத்தையும் www.tamilvu.org என்ற இணையதளம் மூலம் அளித்தல்.

## 5. செயல்பாடுகள்

### 5.1. கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் சான்றிதழ், பட்டயம், பட்டம் போன்ற கல்வித் திட்டங்களை வகுத்து வழங்கி வருகிறது. மேலும் கணினித் தமிழ்ப் பட்டயத்தையும் வழங்குகிறது.

தமிழ் இணையக் கல்விக்கழகம் மழலைக் கல்வி, சான்றிதழ் கல்வி, மேற்சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், தமிழியலில் இளங்கலைப் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது. இக்கல்வித் திட்டங்களில் பயில்வதற்கு வயது உச்சவரம்பு ஏதுமில்லை. அதன் விவரங்கள் பின்வருமாறு :-

#### 5.1.1. மழலைக் கல்வி

மழலைக் கல்விப் பாடங்கள், பல்லூடகத் தன்மையில் படங்கள், காட்சிகள், படக்கதைகள், கவிதைகள், பாடல்கள் போன்றவைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**5.1.2. சான்றிதழ் (1-ஆம் வகுப்பு முதல் 6-ஆம் வகுப்பு வரையிலான படிப்பிற்கு இணையானது)**

சான்றிதழ் கல்வி கீழ்க்கண்டவாறு மூன்று நிலைகளில் வழங்கப்படுகிறது.

- அடிப்படைநிலை (1 மற்றும் 2-ஆம் வகுப்புக்கு இணையானது)
- இடைநிலை (3 மற்றும் 4-ஆம் வகுப்புக்கு இணையானது)
- மேல்நிலை (5 மற்றும் 6-ஆம் வகுப்புக்கு இணையானது)

**5.1.3. மேற்சான்றிதழ் (7-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை இணையானது)**

மேற்சான்றிதழ் கல்வி கீழ்க்கண்டவாறு மூன்று நிலைகளில் வழங்கப்படுகிறது.

- நிலை 1 (7 மற்றும் 8-ஆம் வகுப்புக்கு இணையானது)
- நிலை 2 (9 மற்றும் 10-ஆம் வகுப்புக்கு இணையானது)
- நிலை 3 (11 மற்றும் 12-ஆம் வகுப்புக்கு இணையானது)

### 5.1.4. இளநிலைத் தமிழியியல் பட்டக் கல்வி

இளநிலைத் தமிழியியல் பட்டக் கல்வியியல் பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டம் போன்ற அலகுகளைத் தன் அமைப்பில் கொண்டுள்ளது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் வடிவமைக்கப்பட்டு வரும் பல்வேறுபட்ட பாடத் திட்டங்களில் 19,373 மாணவர்கள் 75 நாடுகளிலிருந்து பதிவு செய்துள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட திட்டங்களில் 20 நாடுகளிலுள்ள 93 தொடர்பு மையங்களிலிருந்து மாணவர்களுக்கு கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 9,544 மாணவர்கள் பல்வேறு நிலைகளில் பயின்று தேர்ச்சி பெற்றுள்ளனர். சான்றாக பிரான்ஸிலிருந்து 179 மாணவர்களும், ஸ்ரீலங்காவிலிருந்து 1657 மாணவர்களும், ஓமனிலிருந்து 1934 மாணவர்களும், அமெரிக்க ஐக்கியநாடுகளிலிருந்து 2422 மாணவர்களும், சான்றிதழ், பட்டயம் மற்றும் பட்டங்கள் பெற்றுள்ளார்கள்.

அனைத்து 93 தொடர்பு மையங்களின் விவரங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் www.tamilvu.org இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

தமிழ் இணையக் கல்விக்கழகம் உலகெங்கும் உள்ள மாணவர்களின் நலனுக்காக மழலை, அடிப்படை நிலை, இடைநிலை மற்றும் மேல்நிலை தமிழ்ப் பாடங்களைக் கற்க பின்வருவனவற்றை உருவாக்கியுள்ளது:-

- தமிழ் கற்க
- தமிழ் கற்போம்
- திருக்குறள்
- தொழில்நுட்பக் கலைச்சொல் பேரகராதி

**6. இணையவழி கணினித் தமிழ்ப் பாடத் திட்டம்**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் நாள், "கணினித் தமிழ்" என்ற பட்டயம் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் வழங்கப்படும் என சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார். இத்திட்டத்தின் மதிப்பு ரூ.20

இலட்சம் ஆகும். இதன் மூலம் மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் மற்றும் தமிழ் ஆர்வலர்களும் பயன் பெறுவர். இதற்கானப் பணி நடைபெற்று வருகிறது.

**7. மின் நூலகம்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் ஒரு மின் நூலகத்தை உருவாக்கியுள்ளது. இதன் இணையதள முகவரி www.tamildigitallibrary.in. இம்மின் நூலகத்தில் அரிதான அச்சிடப்பட்ட புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகள் ஆகிய சேகரிப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கப் படுத்தப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் வருகின்றன. இந்த இணையதளம் மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**7.1.. தமிழ் கலை மற்றும் கலாச்சார செயல்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் மின்னுரு வடிவத்தில் ஆவணங்கள் மற்றும் காப்பகப்

பொருண்மைகளைப் பாதுகாத்து இணையத்தில் www.tagavalaatruppadai.in என்ற முகவரியில் உரிய தேடுதல் வசதியுடன் பதிவேற்றி வருகின்றது.

## 7.2. கணினித் தமிழ்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியினைப் பயன்படுத்திக் கணினித் தமிழில் ஆராய்ச்சியினை மேம்படுத்துகிறது. அடிப்படை தமிழ்த்தரவு, தமிழ் சம்பந்தப்பட்ட மென்பொருள் கருவிகள், ஒருங்குறி எழுத்துருக்கள் இன்னும் பிறவற்றை உருவாக்கி வருகிறது. மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகம் பிறரால் உருவாக்கப்பட்ட தமிழ் மென்பொருள்கள், அதன் கருவிகளைப் பரிசோதித்துச் சான்றிதழ் அளிக்கிறது. தமிழ் இணையக் கல்விக்கழகம் அமெரிக்காவிலுள்ள ஒருங்குறி சேர்த்தியத்தில் (Unicode Consortium) தமிழ்நாடு அரசின் சார்பில் உறுப்பினராக உள்ளது.

## 8. தமிழர் தகவலாற்றுப்படை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் "தமிழர்கள், தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் அனைத்து சாதனைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய விரிவான மற்றும் ஒருங்கிணைந்த களஞ்சியம் ஒன்று ரூ.20.00 இலட்சம் செலவு மதிப்பீட்டில் உருவாக்கப்படும்" - என்று அறிவித்தார்கள். அதன்படி "தகவலாற்றுப்படை" திட்டத்தின் கீழ், தொல்பழங்காலம், அகழாய்வுகள், கல்வெட்டுகள், வழிபாட்டுத் தலங்கள், சிற்பங்கள், நாணயங்கள், செப்பேடுகள், தொல்லியல் சின்னங்கள், ஓவியங்கள் ஆகியவற்றில் சேகரிக்கப்பட்ட மற்றும் எடுக்கப்பட்ட மொத்தம் 70,600 ஒளிப்படங்கள் விளக்கமான மீத்தரவுகளோடு ஒருமித்த வடிவில் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த இணையதளம் (www.tagavalaatruppadai.in) 11.10.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தொல்லியல் மற்றும்

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் அவற்றை ஒளிப்படங்களோடு இணையத்தில் பதிவேற்றுதல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.




படம் – 43 : தகவலாற்றுப்படை இணையதளம்

## 9. மின் நூலகம் உருவாக்குதல்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின் நூலகம் அரிய ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் இதழ்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கணிப்பொறியால் வாசிக்கத்தக்க அட்டவணை (MARC21) என்ற முறையில்

www.tamildigitallibrary.in என்ற இணையதளத்தில் ரூபாய் ஒரு கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மின்நூலகம் 11.10.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தற்பொழுது இம்மின் நூலகத்தில் 17,552 புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் MARC21 வடிவமைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.



**படம் – 44 : மின் நூலக இணையதளம்**

**10. ஓலைச்சுவடிகளின் மின்னுருவாக்கம் மற்றும் அட்டவணைப் படுத்துதல்**

டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் நூலகம், இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் உள்ள ஓலைச்சுவடிகளில், முற்காலத் தமிழக மக்களின், கல்வி, மருத்துவம் மற்றும் கலாச்சாரம் பற்றிய தகவல்கள் உள்ளன. இந்த ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் செய்யவும் மற்றும் அட்டவணைப் பட்டியலிடும் பணிகள் மேற்கொள்ளவும் ரூ.1.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 4,15,708 ஓலைச்சுவடிகள் மின்னுருவாக்கப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளன.

**11. மாதாந்திரச் தொடர் சொற்பொழிவு**

தமிழ்ப் பாரம்பரியம், கலை, நாகரிகம் போன்றவைகளை உலகெங்கும் பறைசாற்றுவதற்காக தமிழ் இணையக் கல்விக்கழகம் பல்வேறு துறைகளில் புலமை பெற்ற அறிஞர்களின் வழியாக மாதாந்திர தொடர்ச்

சொற்பொழிவுகளை நடத்தி வருகிறது. இச்சொற்பொழிவுகள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. இதுவரை 49 சொற்பொழிவுகள், தமிழர்களின் சிற்பம், மொழி, பண்டைய நாகரிகம் போன்ற துறைகளிலிருந்து எடுத்தாளப்பட்டன.

## 12. தமிழ் உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருட்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருளை உருவாக்கி வருகிறது. இம்மென்பொருள், உரையாடலில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து, அவற்றைத் திருத்துவதற்கான பரிந்துரைகளையும் வழங்கும். இந்த இலக்கணச் சரிபார்ப்புக் கருவி, குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு இலக்கண விதிகளை அறிந்து கொள்ள உதவுகிறது. பார்வைத் திறன் குறைபாடுள்ளோர் எளிதில் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் உதவக்கூடிய பேச்சு செயலாக்கக் கருவி உருவாக்கப்படவுள்ளது.

## 13. இயந்திர மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள்

2017-2018 தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANII) கீழ், இயந்திர மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் என்ற திட்டம் ரூ. 72.72 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. அதன் முக்கிய நோக்கம், ஆங்கில மொழியில் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் கண்டறியப்பட்டது போல், தமிழ் மொழியிலும் கண்டறிவதாகும். இதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## 14. புதிய பாடத்திட்டங்கள் உருவாக்குதல்

பெரும்பாலோரின் கோரிக்கையின்படி தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத் திட்டங்கள், பாடத்திட்டக் குழுவால் மாற்றி அமைக்கப்பட உள்ளன.

## 15. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பரப்புரைப் பணிகள்

### 15.1 கணித்தமிழ்ப் பேரவை (A Forum for Tamil Computing)

தமிழ் நாடெங்கிலும் உள்ள 100 உயர் கல்வி நிறுவனங்களில் ரூ.25 இலட்சம் செலவில் கணினித் தமிழின் இன்றியமையாமையைப் புரிந்துகொள்ளும் விதமாக "கணித்தமிழ்ப் பேரவை" உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது வரை 10,000 மாணவர்கள் பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலிருந்து கணினித்தமிழ்ப் பேரவை உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். தமிழ் இணையக் கல்விக்கழகமும், மாணவர்களுக்குத் தமிழில் வலைப்பூக்கள் மற்றும் குறுஞ்செயலிகளை உருவாக்கப் பயிற்சி அளித்து வருகிறது. மேலும் 100 கணினித்தமிழ்ப் பேரவைகள் தொடங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 15.2. தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம் (Tamil Mega Encyclopedia project)

தமிழ் இணையக் கல்விக்கழகம், இணையவழித் தமிழ் பொருளடக்கத்தினைச் சேகரித்து, "தமிழ்ப்

பெருங்களஞ்சியத் திட்டம்" என்ற ஒன்றினை உருவாக்கியுள்ளது. இதுவரை வேளாண்மை, மீன்வளம், வேதியியல், உயிரியல், இயற்பியல் இன்னும் பிறத் துறைகளிலிருந்து பெறப்பட்ட 84,000-த்திற்கும் மேற்பட்ட தமிழ்க் கட்டுரைகள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் காலத்தில் இவைகளைப் பல்லூடகப் பொருளடக்கங்களாக அளிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 15.3. கான் கல்விக்கழகம் கல்விக் காணொலிகளைத் தமிழாக்கம் செய்தல்

தமிழ் இணையக் கல்விக்கழகம், அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள வெற்றிவேல் அறக்கட்டளை, மற்றும் கான் கல்விக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து காணொலிகளைத் தமிழாக்கம் செய்து வருகிறது. இது வரை 1913 காணொலிகள், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளத்திலும், யூ-டியூப்பிலும் (YouTube) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 15.4. படைப்பாக்கப் பொதுமை முயற்சி

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் 01.07.2016 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.105இல், தமிழ் வளர்ச்சித்துறை சார்ந்த பணிகள் (நூல்கள் முனைவர் பட்ட ஆய்வேடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவை) மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள் அனைத்தும் படைப்பாக்கப் பொதும உரிமத்தின்படி (as per Creative Commons) அனைவருக்கும் பகிரப்படும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் அறிவைச் சட்டப்படி பிறருக்குக் கிடைக்கப் பெறுவது இதன் நோக்கம் ஆகும்.

இதனை நிறைவேற்றும் விதமாக 17,552-த்திற்கும் மேற்பட்ட நூல்கள் மற்றும் இதழ்கள் தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்மொழியின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்காக, தமிழ் இணையக் கல்விக்கழகமும் விக்கிபீடியாவும் சேர்ந்து, பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

## அத்தியாயம் - 6

# தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

### 1. முன்னுரை

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013-இன் கீழ், 08.06.2018 அன்று பதிவு செய்யப்பட்ட ஒரு தமிழக அரசு பொது நிறுவனம் ஆகும்.

### 2. தொலைநோக்குப் பார்வை


தமிழகத்தில் உள்ள அனைத்து தனிநபர்கள் மற்றும் இல்லங்களை அதிவேக அலைக்கற்றை மற்றும் தடையில்லா இணைப்பு மூலம் தகவல் தொழில்நுட்பத்தைக் கொண்டு மேம்படுத்துதல்.

### 3. குறிக்கோள்

"பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம பஞ்சாயத்துகள், 528 பேரூராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 15

மாநகராட்சிகள் அனைத்தையும் கண்ணாடி இழை வடத்தை பயன்படுத்தி, அதிவேக அலைக்கற்றை மற்றும் தடையில்லா இணைப்புக்கான உட்கட்டமைப்பில் இணைத்தல்.

**6.4. நிறுவன அமைப்பு**




**5. பாரத்நெட்**

மத்திய அரசின் பாரத்நெட் திட்டமானது, நாட்டில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை வடம் மூலம் இணைத்து, அதிவேக அலைக்கற்றை

வழங்கும் திட்டமாகும். மத்திய அரசின் பங்களிப்போடு இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் மாநில அரசே செயல்படுத்தும் என்றும், இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக, "தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்ப்பரேஷன்" என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் உருவாக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 14.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-இன் கீழ் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) தொடங்குவதற்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அமைப்பு ஆவணம் (Memorandum of Association (MOA)) மற்றும் அமைப்பு நெறிமுறைகள் (Articles of Association (AoA)) ஆகியவற்றிற்கான ஒப்புதலுடன், இந்நிறுவனம் இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013-இன் கீழ், 08.06.2018 அன்று பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முலம் தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் குறைந்தபட்சம் 1 Gbps அளவிலான மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றை வழங்கப்படும்.

பாரத்நெட்-II திட்டத்தின் செயல்பாடுகளை தமிழ்நாட்டில் மேற்பார்வையிட, மாநில அளவிலான செயலாக்கக் குழு (SLIC) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, மாநில அரசு அலுவலர்கள் தவிர Universal Services Obligation Fund (USOF) மற்றும் Bharat Broadband Network Limited (BBNL) அலுவலர்களையும் உறுப்பினர்களாக கொண்டுள்ளது.

இத்திட்டத்தினை GPON-Linear முறையில் ரூ.1230.90 கோடியில் செயல்படுத்த மைய அரசு ஒப்புதல் வழங்கியது. அதன் பின்னர் Revised Linear Architecture என்னும் திருத்தப்பட்ட முறையில் செயல்படுத்த ரூ.2411 கோடி செலவிலான திருத்திய வரைவுத் திட்டம், மைய

அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் தமிழ்நாட்டில், வலையமைப்பு கட்டமைப்பினை உருவாக்குதல், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கோள்ளும். இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்தும் பொருட்டு திட்டச் செயலாக்க முகமையினை (Project Implementing Agency) தேர்வு செய்ய வேண்டி, தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET), கருத்துரு வேண்டும் கோரிக்கையினை (Request for Proposal) தயாரித்து வருகிறது .

## 6. தமிழ்நெட்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 14.07.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ், மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகளை

இணைக்க மாநிலம் முழுவதும் கண்ணாடி இழை வலையமைப்பு அமைக்கப்பட்டு, அதிவேக அலைக்கற்றை வழங்கப்படும் என்றும், இத்திட்டம் "தமிழ்நெட்" என அழைக்கப்படும் என்றும் அறிவித்தார். இதன்மூலம் டிஜிட்டல் புரட்சியின் நன்மைகள் மற்றும் அரசுத் துறைகளின் சேவைகளை நகர்ப்புற மக்கள் அவரவர் இல்லத்திலிருந்தே பெறமுடியும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில், 16.05.2018 அன்று நடத்தப்பட்ட துறை வாரியான ஆய்வு கூட்டத்தில் "தமிழ்நெட்" மற்றும் "பாரத்நெட்" ஆகியவற்றை இணைத்து, ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்க முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு மின் தொடரமைப்பு நிறுவனம் (TANTRANSCO) மற்றும் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) ஆகிய நிறுவனங்களின் தற்போதுள்ள மற்றும்


உத்தேசிக்கப்பட்டுள்ள இழை வலையமைப்பினைக் கொண்டு தமிழ்நெட் திட்டத்தின் வலையமைப்பினை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பாரத்நெட் திட்டத்துடன் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பாக (Integrated Digital Infrastructure) செயல்படுத்தப்படும் .

**7. ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் கட்டமைப்பிற்கான வலையமைப்பு**

"ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு" (Integrated Digital Infrastructure), "பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" ஆகியவற்றினை ஒருங்கிணைப்பதன் மூலம் அமைக்கப்படும். இதன் திறன் மூலம் நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள இல்லங்களுக்கு அதிவேக, மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றை வழங்க இயலும். இவ்வலையமைப்பு, தமிழ்நாட்டில் சுமார் 55,000 கி.மீ அளவிற்கு முற்றிலும் புதிய கண்ணாடி இழை கொண்டு, பரவலாக உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் இணைக்கும். கண்ணாடி இழை கட்டமைப்பானது, பூமிக்கு

அடியில் மற்றும் மின்கம்பங்களின் மூலமாகவும் அமைக்கப்படும். இவ்விரு முறைகளில் செயல்படுத்த முடியாத இடங்களில், ரேடியோ அலைவரிசை/ பொதுவெளி கண்ணாடி இழை வட தகவல் தொடர்பு (Radio (RF)/Free Space Optical Communications (FSOC)) தொழில்நுட்பத்தின் மூலம் இணைக்கப்படும்.

கீழ்க்காணும் வரைப்படத்தில் வட்டாரங்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள் ஆகியவை எவ்வாறு இணைக்கப்படும் என்பது குறித்து விளக்கப்பட்டுள்ளது.




படம் – 45




**படம் – 46 : இராமநாதபுரம் மாவட்டம்**

**பல அடுக்குகளைக் கொண்ட இவ்வலையமைப்பானது,** DWDM (Dense Wavelength Division Multiplexing) , MPLS (Multiprotocol Label Switching ) **போன்ற தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டு பாதுகாப்பு செயல்பாட்டு மையம்** (SOC), **செயல்பாட்டு ஆதரவு அமைப்பு** (OSS) **மற்றும் வணிக ஆதரவு அமைப்பு** (BSS) **ஆகியவற்றின் வாயிலாக கட்டுப்படுத்தப்பட்டு இயக்கப்படும்.**

நவீன தொழில்நுட்பங்களான கூடுதல் குவிய கட்டமைப்பு (HCI-Hyper Converged Infrastructure) மற்றும் மென்பொருள் வரையறுக்கப்பட்ட கட்டமைப்பு (SDN-Software Defined Network) கொண்டு வலையமைப்பு செயல்பாட்டு மையம் (NOC-Network Operating Centre) சென்னையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் தொடர்புடைய மையப்படுத்தப்பட்ட வசதியானது, "தொலைநோக்குப் பார்வையுடன் குடிமக்களை மையமாக கொண்ட ஆளுகையினை" (Citizen Centric Governence Vision) செயல்படுத்துவதை, இயல்பாக ஆதரிக்கும் திறன் கொண்டதாக அமையும்.

# அத்தியாயம் – 7

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

## 1. முன்னுரை

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவனமாகும். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து படித்து முடித்து வெளிவரும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதும், அதன் மூலம் அவர்களை தொழிற்துறைக்கு உகந்தவர்களாக மாற்றுவதும், தகவல் மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக

உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சிக் குழு மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

**2. தொலைநோக்குப் பார்வை**

மாணவர்களை தொழில்துறைக்கான தகுதி பெறச் செய்தல்.

**3. குறிக்கோள்**

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனமானது, பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் துறை சார்ந்த அறிவினை உருவாக்கி, ஒருங்கிணைத்து மற்றும் பரவிடச் செய்து, அதன் மூலம் கல்வி நிறுவனத்தில் பெற்ற கல்வி அறிவிற்கும், தொழில் நிறுவனத் தேவைக்கும் இடையேயான இடைவெளிக்கான பாலமாக

விளங்குகிறது. மேலும் கல்வி கற்போர், தொழில் நிறுவனத் தேவைக்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக் கொள்ள தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் சமவாய்ப்பு அளிக்கிறது.

**4. நோக்கங்கள்**

- கல்லூரி மாணவர்களை தகவல் மற்றும் தகவல் தொடர்புத் துறையின் தேவைகளுக்கேற்ப திறன் கொண்டவர்களாக மாற்றுதல்
- தமிழகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

**5. செயல்பாடுகள்**

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனமானது, உயர்கல்வி ஆசிரியர் மேம்பாடு, மாணவர் திறன் மேம்பாடு, தொழில் முனைவு மேம்பாடு, இளைஞர் மேம்பாடு, ஆய்விதழ்கள் மற்றும் பிரசுரங்கள், டிஜிட்டல் மேம்பாடு மற்றும் தொழில்துறை மற்றும் கல்வி நிறுவனத்

தொடர்பு திட்டம் ஆகிய ஏழு தூண்களைக் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**5.அ. ஆசிரியர் மேம்பாடு**

- 283 உயர்கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழகத்தில் நடத்தப்பட்டு, அதன்மூலம் 7949 உயர்கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- 600 உயர்கல்வித்துறை ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் நான்கு டெக்னாலஜி கூட்டங்கள் (Conclaves) நடத்தப்பட்டுள்ளன.

**5.ஆ. திறன் மேம்பாடு**

- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கும் இந்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான (IT/ITeS) திறன் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் அமையப்பெற்ற நாஸ்காம் (NASSCOM), ICTACT நிறுவனத்தை IT/ITeS திறன் பயிற்சி வழங்கும் நிறுவனமாக அங்கீகரித்துள்ளது.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 700 மாணவர்களுக்கு, மேம்படுத்தப்பட்ட IT/ITeS துறைசார் பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (TAHDCO) வேலை வாய்ப்பு திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 90 தாழ்த்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் (கிறிஸ்துவர்) மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்த (SC/SCC/ST) வேலையில்லா இளைஞர்களுக்கு, தொலைத் தொடர்பு மற்றும் சில்லரை விற்பனை (Telecom and Retail) துறைசார் பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 117 வேலையில்லா இளைஞர்களுக்கு வங்கி, நிதிசேவை மற்றும் காப்புறுதி (BFSI) பயிற்சியும், 456

இளைஞர்களுக்கு, சில்லறை விற்பனை (Retail) துறைசார் பயிற்சியும் அளிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- தமிழக அரசின் தமிழ்நாடு உயர்கல்வி மாநில மன்றம் (TANSCHE) அங்கீகாரத்தின்கீழ், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் 4637 இறுதியாண்டு மாணவர்களுக்கு மென்திறன் மற்றும் தொழில் விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் (Social Welfare and Nutritious Meal Programme Department) நடத்தப்படும் விடுதிகளில் உள்ள 80 மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனத்தால் (NSDC) நடத்தப்பட்ட "ஸ்கில் சாத்தி" (SkillSaathi) அளவிலான வேலை வாய்ப்பு ஆலோசனைப் பயிலரங்கம் மூலம் 64,219 தமிழக மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## 5.இ. தொழில் முனைவு மேம்பாடு

- இந்திய சிறு தொழில் நிறுவன மேம்பாட்டு வங்கி (SIDBI)- இன் அனுமதியுடன், 500 மாணவர்களுக்கு தொழில்முனைவு மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- 21,968 மாணவர்கள் பயன்பெறும் வகையில் 77 தொழில்முனைவு விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

## 5.ஈ. இளைஞர் மேம்பாடு

- **"ஐசிடி அகாடெமி யூத்டாக் - தமிழ்நாடு 2018"**- தமிழக கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. இந்த போட்டியில், 7,150 மாணவர்கள் பங்கேற்றனர். இப்போட்டியில் வென்ற மாணவர்கள் இலவச வெளிநாட்டுக் கல்வி சுற்றுலா அனுப்பப்பட்டுள்ளனர்.

- கோவையில் நடைபெற்ற "ஐசிடி அகாடெமி யூத் லீடர்ஷிப் சம்மிட் - 2018"-ல் 3000 மாணவர்கள் பங்கேற்றனர்.
- "ஐசிடி அகாடெமி யூத் டெக்னாலஜி சம்மிட் - 2018" சென்னையில் நடத்தப்பட்டது.
- சென்னையில் நடைபெற்ற "ஐசிடி அகாடெமி யூத் இன்னோவேஷன் சம்மிட் - 2018"-ல் 3000 மாணவர்கள் தமிழகம் முழுவதிலுமிருந்து பங்கு பெற்றனர்.

### 6. ஆய்விதழ்கள் மற்றும் பிரசுரங்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் பின்வரும் 5 ஆய்விதழ்களை வெளியிட்டு வருகிறது. இந்த சர்வதேச ஆய்விதழ்கள் பல்வேறு சர்வதேச தரவு தளங்களில் அதிகமாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை

உலகம் முழுவதிலுமிருந்து 1083 ஆய்விதழ்கள், ஆராய்ச்சியாளர்களால் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

- ஐசிடிஏசிடி (ICTACT) தகவல் தொழில் நுட்ப ஆய்விதழ் (IJCT)
- ஐசிடிஏசிடி (ICTACT) ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப் பேழை ஆய்விதழ் (IJIVP)
- ஐசிடிஏசிடி (ICTACT) மென் கணினி ஆய்விதழ் (IJSC)
- ஐசிடிஏசிடி (ICTACT) நுண் மின்னணுவியல் ஆய்விதழ் (IJME)
- ஐசிடிஏசிடி (ICTACT) மேலாண்மை ஆய்வு சார் ஆய்விதழ் (IJMS)

**7. டிஜிட்டல் அதிகாரமளித்தல்**

பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சாக்ஷத்ரா அபியான் (PMGDISHA) திட்டத்தின் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் பங்குதாரராக உள்ள ஐசிடிஏசிடி, 2018-2019 ஆம் ஆண்டில் 7,66,772 நபர்களை பரீட்சித்து, சான்றிதழ் வழங்கியுள்ளது.

**8. தொழிற் துறை மற்றும் கல்வி நிறுவனத் தொடர்புத் திட்டம்**

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் தலையாய ஆண்டு மாநாடு "ப்ரிட்ஜ் (BRIDGE)" ஆகும். இது இந்தியாவில் தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான மிகப்பெரிய தொடர்பு நிகழ்வாகும். இதன் மூலம் இந்தியாவிற்கான அடுத்த தலைமுறையினரின் திறமையை மேம்படுத்த கல்வித்துறை தலைவர்கள், தொழில் துறை நிர்வாகிகள் மற்றும் அரசின் கொள்கை வகுப்போர் ஆகியோருடன் கூடி ஆலோசித்து, விவாதித்து தீர்வு கண்டறியப்படும். மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் M.மணிகண்டன் M.B.B.S., M.S., FIAGES அவர்கள் ICT அகாடமி "பிரிட்ஜ் 2019" மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். இம்மாநாட்டில் 1200 பேர்கள் தமிழகம் முழுவதிலிருந்தும் பங்கு பெற்றனர். "Industry 4.0"என்ற தலைப்பின் கீழ் விவாதிக்கப்பட்டது.







**படம் – 47:** மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் ICT அகாடமி "பிரிட்ஜ் 2019" மாநாட்டை துவக்கி வைத்தார்.

## 9. 2018-2019-ல் நிறைவுற்ற அரசுத் திட்டங்கள்

2018–2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் பின்வருமாறு:

| வ. எண். | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1 | சமூக நலத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள 80 மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. | தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை (Social Welfare and Nutritious Meal Programme Department) |
| 2. | 700 கல்லூரி மாணவர்களுக்கான மேம்பட்ட IT/ITeS பயிற்சி அளிக்கப்பட்டது. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (Tamil Nadu Skill Development Corporation). |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 3. | 90 கல்லூரி மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. | தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) |
| 4. | 500 கல்லூரி மாணவர்களுக்கான தொழில் முனைவு மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. | இந்திய சிறு தொழில் நிறுவன மேம்பாட்டு வங்கி, (SIDBI) இந்திய அரசு. |

**டாக்டர். எம். மணிகண்டன்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**